Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி–09 | 25–08–2004 | புதன்கிழமை | ஓசை –189

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்.
R.V
பந்தல் சேவை, தர்மபுரம்
அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.
(சி-10060)

## அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் சச்சி மாஸ்ரரின் சகா சுட்டுக்கொலை

### – துப்பாக்கிச் சூடு நடத்தியோர் தப்பி ஓடினர்

(கொழும்பு)

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்றில் வைத்து விசாரணைக்காகக் கொண்டு வரப்பட்ட கருணா குழுவைச்சேர்ந்த கைதி ஒருவர் ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் நடந்த இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது அருட்செல்வம் என அழைக்கப்படும் பேரின்பம் ஜெயக்குமார் (வயது - 24) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

இவர் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட சச்சி மாஸ்ரர் என்பவரின் சகா ஆவார். கடந்த மே மாதம் 19 ஆம் திகதி ஆயுதங்களுடன் சென்றவேளை அக்கரைப்பற்றில் வைத்து கைது செய்யப்பட்டு சட்டவிரோதமாக ஆயுதங்களைக் கடத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தார்.

இவரை நேற்றுக்காலை நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் மனாஸ் முன்னிலையில் ஆஜர் செய்தபோது அவரை அடுத்த மாதம் ஏழாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டபோது இவரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 10 புலிகள் கூரை மீதேறி போராட்டம்

(கொழும்பு)

சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகள் பத்துப்பேர் சிறைச்சாலையின் கூரை மீதேறிப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இவர்கள் தமது போராட்டத்தின் போது கூறுகையில் தாங்கள் கடந்த இரண்டாம் மாதம் கைது செய்யப்பட்ட போதிலும் இதுவரை தாங்கள் எதுவித விசாரணையும் இன்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ளமையை ஆட்சேபித்தே இந்தப் போராட்டத்தை நடத்தியுள்ளதாகக் கூறினார்கள்.

போர் நிறுத்த உடன்பாடு அமுலில் உள்ள நிலையில் கைது செய்யப்பட்ட தம்மை விடுதலை செய்யவில்லை.

இதேவேளை போர் நிறுத்தம் அமுலில் உள்ளவேளையிலும் பொலநறுவை உப்புள்ள விகாரையில் வைத்து ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட பதின்னான்கு பேர் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டமை மற்றும் இது போன்ற ப[illegible]ங்களைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தாக்குதலுக்குத் தமிழ்க் குழுக்களை

# அரசாங்கம் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும்!

## நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம்



(கொழும்பு)

**இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களுக்கு தமிழ் ஆயுதக் குழுக்களைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டுமென நோர்வேயின் விஷேடதூதுவர் எரிக்சூல்ஹெய்ம் கூறியுள்ளார்.**

உலக சமாதானத்திற்கான ஏற்பாட்டுக்குழுவினரின் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே ஏற் பாட்டாளர் என்ற நிலையிலேயே தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்த அவர்,

எவருக்கும் தீமை ஏற்படாத தீர்வை ஏற்படுத்துவதே நோர்வேயின் நோக்கமெனவும் அவர் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; முரண்பட்டுள்ள இரு தரப்பினரையும் சமாதானத் தீர்வை நோக்கி அழைத்துச்செல்வதே நோர்வேயின் பங்கு. இந்த நடவடிக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்துறைப் பொறுப்பாளருடன் ஹெவ்டே இன்று சந்திப்பு

இன்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் டொன்புறுாவ் ஹெவ்டே அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புளிகளின் சமாதானச் செயலகத்தில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளது. (தீ)

### -கொடிகாமம் பேருந்து நிலையப்பகுதியில்-

## சுண்டல் விற்பனை என்ற பெயரில் கஞ்சா விற்பனை செய்தவர் கைது

கடந்த பல மாதங்களாய் கொடிகாமம் பேருந்து நிலையத்திற்கு முன்னால் காரம்சுண்டல் என்ற போர்வையில் கஞ்சா விற்பனையையும் செய்து வந்த ஒருவர் மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் 100 கிராமிற்கு உட்பட்ட கஞ்சாவுடன் கொடிகாமம் பொலிசாரால் பிடிக்கப்பட்டுள்ளார். இவருடைய நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த மக்கள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் இவரை விசாரித்த போதுதான் அப்படி ஒன்றும் விற்பதில்லை என கூறியதாகவும் கடந்த இரு தினங்களுக்கு முன் இவர் சுண்டல் விற்றுவந்த வண்டியின் மறைப்பு பகுதியில் வைத்து கஞ்சா விற்ற போது பொதுமக்களால் இவர் அடையாளம் காட்டப்பட்டு பொலிசாரின் உதவியுடன் இவர் பிடிக்கப்பட்டுள்ளார். இதற்கு மத்தியில்

(12. ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி வழிமுறையை முன்னெடுத்துச்செல்ல கிழக்கின் நிலைமைகள் சாதகமாக இல்லை

### - கண்காணிப்புக்குழு அதிகாரி கருத்து

(கொழும்பு)

கிழக்கில் உள்ள நிலமை அமைதி வழிமுறையை மேலே கொண்டுசெல்ல உதவக்கூடிய நிலையில் இல்லை என போர் நிறுத்தக் கண்ணாணிப்புக்குழுவின் அதிகாரிகளில் ஒருவரான ஜோன் ஒஸ்கார் சோன்ஸ் தெரிவித்தார். நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கும், சிறிலங்கா பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்குமிடையேயான சந்திப்புக் குறித்து கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் பல விடயங்களைப் பற்றியும் பேசினோம். அதில் குறிப்பாக இரண்டு விடயங்களைப் பற்றிக் கூறுகிறேன்.

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் நடந்துவரும் படுகொலைச் சம்பவங்கள் மற்றும் திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் விடுதலைப்புலிகள் முகாம் அமைத்து வருவதாக குற்றச்சாட்டுப்பற்றி நாங்கள் பேசினோம்.

மட்டக்களப்பு படுகொலைகளைப் பொறுத்தமட்டில் அவைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அமைதி வழிமுறைக்கு ஊக்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் ராயுவின் உருவப்படம் இணைப்பு

கேணல் ராயு (குயிலன்) அவர்களின் வர்ணதிருவுருவப் படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப் பட்டுள்ளது.

### - வெளிநாட்டு தூதுவராலயம் ஒன்று -

## யாழ்.அப்பக்கடை முன்னான போராட்டம் குறித்து அறிவதில் ஆர்வம்

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் இராணுவத்தின் அப்பக்கடை முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக அறிவதில் கொழும்பிலுள்ள முக்கிய தூதரக அதிகாரிகள் ஆர்வம் காட்டியுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக அத்தூதரக முக்கிய அதிகாரிகள் யாழ்ப்பாணத்திலுள்ள அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் சிலருடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு கேட்டறிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச தரப்புகள் இங்குள்ள அப்பக்கடை குறித்துக் கூட அக்கறையுடன் இருப்பதை இது வெளிப்படுத்துகிறது என தூதரக அதிகாரியுடன் பேசிய அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

### - வவுனியா சிதம்பரபுரத்தில் -

## வரதர் குழுவினால் கொல்லப்பட்ட பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

(செட்டிகுளம்)

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் மேலும் ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி மீட்கப்பட்டுள்ளது.

இது கடந்த வருடம் டிசம்பர் மாதம் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட 19 வயதான செல்வம் பவானி என்பவருடையது என இப் பெண்ணின் தாயாரான நீலாவதியும், சகோதரியான லக்சுமியும் அடையாளம் காட்டியுள்ளனர்.

கைவிடப்பட்ட வீடொன்றின் மலக்குழியில் இருந்து கழுத்தில் கயிறு கட்டப்பட்ட நிலையிலும், வாய் துணியால் கட்டப்பட்ட நிலையிலும் ஆடைகளுடன் இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இப் பகுதியில் இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டபோது சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மூன்று நபர்களைப் பொலிசார் கைது செய்து விசாரித்த போது அவர்கள் இப் பெண்ணைக் கொலை செய்து மலக்குழியில் போட்டு மூடியதாக தெரிவித்த தகவலை அடுத்து நேற்றுக்காலை மாவட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### உடன்தேவை

ஏ-9 வீதியில் (டிப்போச் சந்திக்கும், கந்தசாமி கோவிலுக்கும்) இடையில் கிணற்றுடன் கூடியதும், கட்டடங்களுடனும் அமையக்கூடிய வாடகைக்கு கடை இருத்தல் விரும்பப்படுகின்றது. உடன் தொடர்பு கொள்ளவும். இ.சுதா 65, புகையிரதவீதி, கிளிநொச்சி.(4983)

### காணி விற்பனைக்கு உண்டு

திருநகர் வடக்கு கிராமத்தில் இல 39 1/2 ஏக்கர் உறுதியுடன் கூடிய காணி வீடு, கட்டுக்கிணறுடன் இருக்கின்றது. கிளிநொச்சி வைத்தியசாலை பின்புறமாக A-9 சாலையிலிருந்து 500 மீற்றர் பண்றோட்டில் அமைந்துள்ளது. தொடர்புகொள்க. கோ.சிவராஜா, திருநகர். (4995)

### A/L வர்த்தகப்பிரிவு மீட்டல் வினா விடை

மேற்படி பரீட்சை எழுதிய வர்த்தகப்பிரிவு மாணவர்களிற்கான துரித மீட்டல் வினா விடை வகுப்புக்கள் 28.08.2004 சனி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது. வழமையான ஆசிரியர் குழு: ஆதவன் கல்வி நிலையம் கிளிநொச்சி. (4994)

### காணி விற்பனைக்குண்டு

முல்லைத்தீவு செல்வபுரத்தில் அந்தோனியார் தேவாலயத்திற்கு அருகாமையில் முன்பு வள்ளச் சாலை இயங்கிய காணி ஏறக்குறைய் 1 1/2 ஏக்கர் விற்பனைக்குண்டு எதுவித பிரச்சினையும் இல்லாத அறுதி உறுதி உண்டு. 03 பக்கங்களிலும் வீதி அமைந்துள்ளது. தொடர்பு மரியாம் பிள்ளை ஜெகநாதன் மணற்குடியிருப்பு முல்லைத்தீவு (4686).

### பொருட்கள் மீளப்பெறல்

எமது நிறுவனத்தில் திருத்த வேலைகளுக்காக தங்களால் தருவிக்கப்பட்ட றோணியோ தட்டச்சு இயந்திரங்களை இன்னும் மீளப்பெறாதோர் 25.08.04 தொடக்கம் 03.09.04 இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளத் தவறின் நாம் அதற்கு பொறுப்பாளிகள் அல்ல. இசை வாணி தளபாடவிற்பனை நிலையம், முல்லை வீதி புதுக்குடியிருப்பு. தகவல். உரிமையாளர். (4687)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி,லெமனேட்டிங்போன்றவைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை, கண்டிவீதி, கிளிநொச்சி. T/P.021 2285750.(சி-10064)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எம்மிடம் புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுடர் கோழி வளர்ப்பகம் புலிகளின் குரல் நடுவப்பணியகம் முன் ஒழுங்கை விவேகானந்தநகர் கிளிநொச்சி. (4996)

- யாழ். பல்கலைக்கழக -

# வெளிவாரிப்பரீட்சைகள் அலகின் சங்கீதம்/நாட்டியம் செய்முறைப்பரீட்சை

நுண்கலைமாணி 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருடத்தேர்வு - 2000 கலை முதற்தேர்வு - 2001 பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி-1-2001, பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி 11-2001 ஆகிய கற்கைநெறிகளில் சங்கீத, நாட்டிய அலகுகளுக்கான செய்முறைப்பரீட்சைகள் 01.09.2004 தொடக்கம் இராமநாதன் நுண் கலைக்கழகம் மருதனாமடத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தங்களுடைய பரீட்சைக்கான அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், செய்முறைப்பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். செய்முறைப் பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் தவறாது ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களுக்கு 2223612 என்ற தொலை பேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம். (36)

# மன்னார் கிராமசேவையாளர்களுக்கு பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சை

மன்னார் மாவட்டதிலுள்ள கிராமசேவையாளர்களினை தரம்I இற்கு பதவியுயர்த்துவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் புரட்டாதி மாதம் 12ஆம் திகதி வவுனியாவில் இடம் பெறும் என்றும் இதற்குரிய ஆவணங்கள், சான்றிதழ்கள் ஆகியவற்றை ஒன்று சேர்த்துவைக்குமாறு கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பொதுவான அறிவித்தல் ஒன்றை வழங்கியுள்ளார்.(மி)

## புதிய பிரிவு ஆரம்பம்

**தமிழீழ மாணவர் அமைப்பின் மேஜர் முரளி கணினிப் பயிற்சி நிலையத்தில் M.S.OFFICE. புதிய பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.**

**29.08.04 காலை 10.00 மணிக்கு கணினி நிலையத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறும். அதற்கு முன்னர் கணினி நிலையத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து கொடுக்கவும்.**

குறிப்பு:-மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மேஜர் முரளி கணினிப்பயிற்சி நிலையம்
தமிழீழ மாணவர் அமைப்பு
23 டி யோகபுரம் (பழைய U.N.H.C.R அலுவலகம்) மல்லாவி.

(4992)

## சிவகுரு வாணிபமும் TVS மோட்டார் கம்பனியும்

TVS

*இணைந்து நடாத்தும்*

TVS Centra **மாபெரும் இலவச சுத்திகரிப்பும்**

VTI தொழில்நுட்பம் கொண்டது லீற்றருக்கு 100 Km ஓடக்கூடியது

## TVS சென்ரா அறிமுகமும்

இடம்: சந்திரன் பூங்கா (பாண்டியன் சுவையூற்று முன்பாக)
யாழ்சாலை கிளிநொச்சி

காலம்: 26-08-2004

வன்னிப் பகுதி அனைத்து TVS உந்துருளி பாவனையாளர்களும் 25-08-2004க்கு முன் சிவகுரு வாணிபத்தில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.



**சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்**

நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன் கிளிநொச்சி.

(சி-9985)

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 06 ★ 08 ★ 1945



உதிர்வு 27 ★ 08 ★ 1997

# ந.வித்தியானந்தராசா

(யோகா நகைமாளிகை உரிமையாளர் முல்லைத்தீவு)
(இன்பழகி நகைமாளிகை முல்லைத்தீவு)
(இன்பழகி நகைமாளிகை முள்ளியவளை)

பண்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே
ஆகாயத்தின் சிற்பமே ஆண்டு ஏழு ஆனாலும்
ஆறாது எம்மனது உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கிறோம் எந்நாளும்.

*(25. 08. 2004) புதன்கிழமை நினைவு தினம்*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள்,
முள்ளியவளை.

இன்பழகி நகைமாளிகை,
முல்லைத்தீவு.

(சி-9181)

## கணக்காய்வுப் பயிலுநருக்கான ஆட்சேர்ப்பு

நிதித்துறைக் கணக்காய்வுப்பகுதிக்குப் பயிலுநருக்கான ஆட்சேர்ப்புக்குக் கீழ்வரும் தகைமையுடைய ஆர்வமுள்ளோரைக் குறித்த நாளில் நேரில் வருகைதருமாறு வேண்டுகிறோம்.

**கல்வித்தகைமை:-**

01. க.பொ.த. (சா/த) தேர்ச்சி
02. க.பொ.த.உ/தரத்தில் வர்த்தகப்பிரிவில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் தேர்ச்சி

**அகவை:-** : 21 -30

**பயிற்சிக்காலக்கொடுப்பனவு:-** உருபா 5000

**பயிற்சிக்காலம்:-** 6 மாதங்கள்

பயிற்சிக்காலம் நிறைவுற்றதும் நிதித்துறைச் சம்பளத்திட்டத்திற்கமைவாக கணக்காய்வுப் பணிக்கு பணியமர்த்தம் வழங்கப்படும்.

**நேர்காணல் நடைபெறும் இடம்:-**

*கிளிநொச்சி*
இடம்:- வருவாய்ப்பகுதிச் செயலகம்
காலம்:- 02.09.2004
நேரம்:- மு.ப.9.30

*யாழ்ப்பாணம்*
இடம்:- சந்தைப்பகுதிச்செயலகம்
ஆடியபாதம் வீதி கொக்குவில்
காலம்:- 30.08.2004
நேரம்:- மு.ப.9.30

**குறிப்பு :-**
தகைமையுடையவர்கள் கல்வித்தகைமைச்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றுடன் வருகைதரவும்.

ஆளுநகை,
கணக்காய்வுப்பகுதி,
நிதித்துறை.

(சி-10090)

# அணிசாரா நாடுகள் தீர்மானம் குறித்து இந்தியாவுடன் பேச இஸ்ரேல் முடிவு



ஈராக்கின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைச்சர் மீது •பாக்தாத்தில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவ இடத்தை அவதானிக்கும் அமெரிக்க இராணுவமும், ஈராக்கிய தேசிய படையும் (சம்பவத்தில் அமைச்சர் காயமின்றி தப்பியதாகவும் வேறு 2 பேர் பலியானதாகவும் தெரிய வருகிறது. )

(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் பொருட்களைப் புறக்கணிக்க வேண்டுமென அணிசாரா நாடுகள் இயக்கம் பரிந்துரை செய்தது தொடர்பாக இந்தியாவுடன் பேசவுள்ளது இஸ்ரேல். இந்தப் பரிந்துரையால் இஸ்ரேல் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள வர்த்தகத்தை இதன் மூலம் இழக்க வேண்டியிருக்கும். “அணிசாரா நாடுகளில் இந்தியா, தென்கொரியா போன்றவை மிக முக்கியமானவை. இவற்றுடன் அதிக அளவில் வர்த்தகம் செய்கிறோம். இம்முடிவால் இஸ்ரேலிய ஏற்றுமதி பாதிக்கப்படும்” என அந்நாட்டு ஏற்றுமதி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத் தலைவர் ஷ்ராகா போஸ் தெரிவித்தார். இம்முடிவு குறித்து எங்களுடன் வர்த்தகம் செய்யும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கருத்துக்களைக் கேட்டறிவோம் எனவும் அவர் கூறினார். தற்போது இந்தியா-இஸ்ரேல் வர்த்தகம் ரூபா 6,750 கோடியை எட்டியுள்ளது. ஆசியாவிலேயே யப்பானுக்கு அடுத்தபடியாக இந்தியாவுடன் தான் அதிக வர்த்தகம் செய்கிறது. இஸ்ரேல் இம்முடிவு ஓர் அரசியல் சார்ந்த முடிவு. இதை நடைமுறைப் படுத்துவது கடினம் என இஸ்ரேலிய வெளியுறவுத் துறை கூறியுள்ளது. லண்டன் ஆகஸ்ட்24 ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கும் ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கும் இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டதைத் தொடர்ந்து சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை ஒரு பெரலுக்கு ரூபா 2164 ஆக உயர்ந்தது. ஒக்டோபர் மாதத்திற்கான டெலிவரிக்கு நியூயோர்க் கச்சா எண்ணெய் சந்தையில் பெரலுக்கு ரூபா 2164 ஆக இருந்தது. இது கடந்த வெள்ளிக்கிழமை எப்போதும் இல்லாத அளவுக்கு ரூபா 2201 ஆக இருந்தது. பின்னர் குறைந்த கச்சா எண்ணெய் விலை திங்கட்கிழமை மீண்டும் ஏறியுள்ளது. ஈராக்கின் தெற்குப் பகுதியில் இருந்து ஏற்றுமதி மீண்டும் தொடங்கிவிட்டதால் விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மூன்று இந்தியர்கள் உட்பட 7 பேர் விடுதலை

## புதிய பேச்சுக்களில் முன்னேற்றம்

(புதுடில்லி)

**ஈராக்கில் பணயக் கைதிகளாகச் சிக்கியுள்ள மூன்று இந்தியர்கள் உட்பட ஏழுபேரை விடுவிப்பது தொடர்பாகப் புதிய பிரதிநிதி மூலம் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை நல்ல முன்னேற்றத்தை எட்டியுள்ளதாக இந்தியத் தரப்பு கூறியுள்ளது.**

ஏற்கனவே கே.ஜி.எல். நிறுவனத்துடன் பழங்குடித்தலைவர் அல்-தொலமி நடத்திய பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளது. அல்-தொலமி பொய் என்றும், போலி என்றும் கே.ஜி.எல் நிறுவனம் பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகி விட்டது.

இதனையடுத்தே பேச்சு நடத்துவதற்கு புதிய பிரதிநிதி நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பிரதிநிதிக்கும், கே.ஜி.எல் நிறுவனத்திற்கும் இடையே பேச்சுக்கள் தொடர்கின்றது என்றும் அவை நல்ல முன்னேற்றம் கண்டு வருவதாகவும் கே.ஜி.எல் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ரணாஅபுசாய் கூறியுள்ளார்.



நஜாப்பில் விமானத் தாக்குதல்களுடன் முன்னேறிய அமெரிக்கப்படை வீரர் அங்கு ஒருவரைப் பிடித்து கைது செய்கின்றார்.

# கிளர்ச்சியாளர்களின் தீவிரபோக்கால் நேபாளத்தில் பொருளாதார நெருக்கடி

(காத்மண்டு)

நேபாளத் தலை நகருக்கான விநியோகத்தை மட்டுப்படுத்தும் நோக்கில் மாவோ கிளர்ச்சியாளர்கள் ஏற்படுத்திய முட்டுக் கட்டைகளின் தாக்கம் வெளிப்படையாகத் தெரியத்தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கிளர்ச்சியாளர்கள் காத்மண்டுவிற்கான பிரதான பாதைகளில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்துள்ளனர். இதனால் 15 இலட்சம் பேர் வாழும் தலைநகர் காத்மண்டுவில் எரிபொருள் நிலையங்கள் காலியாகவுள்ளதாகவும், காய்கறிகளின் விலைகள் அதிகளவில் உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமது கெரில்லாக்களை விடுதலை செய்ய வேண்டுமென்பதே மாவோ கிளர்ச்சியாளர்களின் கோரிக்கையாகும்.


# உமாபாரதி கைது விவகாரம் பாராளுமன்றில் எதிர்ப்புத் தெரிவிப்போம்

### -தேசிய சனநாயகக் கூட்டணி

புதுடில்லியில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற தேசிய சனநாயக கூட்டணித் தலைவர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் உமாபாரதியின் கைது விவகாரம் மற்றும் ஏனைய பிரச்சினைகளாலும் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதனைக் கூட்டத்தின் முடிவில் இக்கட்சி ஒருங்கிணைப்பாளர் ஜோர்ச் பெர்னான்டஸ் செய்தியாளர்களிடம் நேற்றுக் கூறியுள்ளார்.



தாய்வானின் பல்வேறு சேதங்களை ஏற்படுத்திய தைபூ சூறாவளியின் தோற்றம்(நாசா நிறுவனம் இதனை வெளியிட்டுள்ளது

# I ஆம் உலகப் போரில் பலியான ஆஸ்திரிய வீரர்களின் சடலங்கள் மீட்பு

முதலாம் உலகப்போரின்போது உயிரிழந்த ஆஸ்திரிய இராணுவ வீரர்கள் மூவரின் சடலங்கள் இத்தாலியிலுள்ள பனிமலையில் உறைந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்கள் சுமார் 86 ஆண்டுகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1918இல் நடைபெற்ற முதலாம் உலகப்போரின்போது இத்தாலி மற்றும் ஆஸ்திரிய இராணுவ வீரர்களுக்கிடையே கடும்போர் ஏற்பட்டது. இத்தாலியிலுள்ள லபாண் மங்கி பனிமலையில் நடைபெற்ற சண்டையில் ஆஸ்திரியா வெற்றிபெற்றது.

எனினும் அந்நாட்டு 11 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். மரணமடைந்த இராணுவ வீரர்களின் உடல்களை அப்பனி மலையிலேயே புதைத்துவிட்டு ஆஸ்திரிய இராணுவத்தினர் நாடு திரும்பி விட்டனர். இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மலை மீட்புக் குழுவினர் அம் மலையைக் குடைந்து பார்த்தபோது ஆஸ்திரிய நாட்டு மூன்று வீரர்களின் உடல்கள் உறை நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மூன்று உடல்களும் உலங்குவானூர்தி மூலம் அவுஸ்திரேலியா எடுத்துச் செல்லபட்டு, உரிய இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

### தேர்வு முறையில் மோசடி பெருவில் மாணவர்கள் போராட்டம்

பெருநாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் பொலிசார் மாணவர்கள் பலரைக் கைது செய்துள்ளனர்.

பெருவில் பல்கலைக்கழகங்கள் மாணவர்களின் தேர்வு முறைகளில் பல்வேறு மோசடிகளும், ஊழல்களும் நடைபெறுவதாக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனையடுத்து மாணவர்கள் நேற்று முன்தினம் போராட்டம் நடத்தியபோதே காவல் துறையினர் அவர்களில் பலரைக் கைது செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலாவில் விமான விபத்து 25 பேர் பலி; ஐவர் குழந்தைகள்

(காரகஸ்)

வெனிசுலாவில் மலையொன்றுடன் விமானம் மோதியதில் 25 பேர் இறந்துள்ளனர். இவர்களில் ஐவர் குழந்தைகள். ஆர்சிலா தீவில் இராணுவ மையத்தில் இருந்து புறப்பட்ட அந்த விமானம் மராகே நோக்கி ஞாயிற்றுக்கிழமை சென்றுகொண்டிருந்த போது கரபோபோ மாநிலத்தில் விபத்துக்குள்ளானது. விமானத்தில் பயணம் செய்த 25 பேரும் இறந்தனர். இவர்களில் இராணுவ அதிகாரிகளும் அடங்குவார். விபத்துக்கான காரணம் தெரியவில்லை.




கடந்த வருடம் இந்தோனேசியாவின் விடுதியொன்றில் நடைம்பற்ற குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டுடன் கைது செய்யப்பட்ட இவரை பத்திரிகையாளர்கள் பேட்டி காணுகின்றனர்.

# அபிவிருத்தியை நோக்கிய திட்டங்களை யுனிசெப் எதிர்காலத்தில் முன்னெடுக்கும்

## -ஆய்வுப்பட்டறையில் யுனிசெப் பிரதிநிதி

(அலுவலக செய்தியாளர்)

**யுனிசெப் அமைப்பு இனிவரும் காலப் பகுதியில் மேற்கொள்ள வுள்ள திட்டங்கள் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டதாக அமையும் என்று கிளி.,முல்லை மாவட்ட யுனிசெப் அமைப்பின் பிரதிநிதி பெனிபுருவ் தெரிவித்தார்.**




கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் யுனிசெப் நிறுவனத்தினால் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு நடுப்பகுதிவரை மேற்கொள்ளப் பெற்ற வேலைத்திட்ட ஆய்வுப் பட்டறை நேற்று முன்தினம் கிளிநொச்சி அரச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கிளி. மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆய்வுப் பட்டறை நிகழ்வில் யுனிசெப் நிறுவன கிளி.,முல்லை மாவட்ட பிரதிநிதி பெனிபுருவ், உலக உணவுத் திட்டப்பிரதிநிதி, கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர். மற்றும் கல்விப்பணிமனை, கிளி. மாவட்ட செயலகம், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு கிளி.முல்லை மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பெற்ற (2002முதல் 2004நடுப்பகுதி வரை) வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், மேற்கொள்ளப்பெற்ற வேலைத்திட்டங்கள் யாவும் திருப்திகரமாக வுள்ளதென தெரிவிக்கப்பெற்றது.

யுனிசெப் பிரதிநிதி தனது உரையில் தற்போது மேற்கொள்ளப்பெற்ற வேலைத்திட்டங்கள் யாவும் அவசரவேலைத்திட்டங்களே எனவும், அடுத்து மேற்கொள்ளப்பெறவுள்ள வேலைத்திட்டங்கள் யாவும் அபிவிருத்தியை நோக்கிய திட்டங்களாகுமெனவும் தெரிவித்தார். (சோ.கு)

## சான்றிதழ் வழங்கல்

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் முல்லை மாவட்ட தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தால் நடாத்தப்பட்ட ஆங்கில மொழித் திறன் பயிற்சியில் சித் தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (08)



புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் 22.08.2004 அன்று, இடம்பெற்ற தமிழீழ விடியல் இசைக் குழுவின் "தாய்மடியின் தாலாட்டு" இசைத்தட்டு ஒலிப்பேழை அறிமுக விழாவில் இசைத்தட்டு ஒலிப்பேழையை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் வெளியிட்டு வைக்க ஆனந்தபுரம் விஸ்ணு ஆலய பிரதமகுரு பிரம்மசிறி இராமசாமி பெற்றுக்கொள்வதைப் படத்தில் காண்க. (படப்பிடிப்பு:- தவரட்ணம்)

# வவுனியா நகரின் கழிவுப்பொருட்களை கொட்டுவதற்கான இடம்குறித்து ஆராய்வு

## மக்கள் ஒத்துழைப்பையும் நகரசபை நாடுகிறது


வவுனியா நகர்ப் பகுதியின் கழிவுப் பொருட்கள் இராசேந்திரகுளம் பகுதியில் கொட்டப்படுவதற்கு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததையடுத்து. அந்தப் பகுதியில் கொட்டாமல் வேறு இடம் ஒன்று அமைப்பது தொடர்பாகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக நகரசபையினர் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நகர்ப்பகுதியில் 60 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் அத்தோடு பாதுகாப்பு கடமையில் உள்ளஇராணுவப் பொலிசார் 20 ஆயிரம் பேர் உள்ளனர் நாள் ஒன்றுக்கு 25 ஆயிரம் மக்கள் நகரின் ஊடாகப் பிரயாணம் செய்வதாகவும் இந்த மக்களால் வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் நாள் ஒன்றுக்கு 15 ஆயிரம் கிலோ கிராம் என்றும் தெரிவிக்கப்படுகிறது இதனை மக்களின் ஒத்துழைப்பின் கீழேயே கட்டுப்படுத்தமுடியும் என்றும், மக்களுக்கு இது தொடர்பாகப் பல முறை தெரிவித்தும் அவர்கள் இதனைக் கடைப்பிடிப்பதாகத் தெரியவில்லை என்று நகரசபையினர் தெரிவிக்கின்றனர். (21)

# பாரஊர்தி-ஈருருளி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

வீதிவிபத்தில் ஈருருளி ஓட்டுனர் படுகாயமடைந்த நிலையில் கிளி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பெற்று சிகிச்சை பெற்றுள்ளார்.



மேற்படி சம்பவம் நேற்று முன்தினம்இரவு7.00 மணியளவில் கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்திக்கும் பரந் தன் சந்திக்குமிடையில் ஏ-9நெடுஞ்சாலையில் இடம் பெற்றுள்ளது.

பரந்தன் நோக்கி ஈருருளியில் சென்ற நபர் பாரவூர்தியுடன் மோதியதில் ஈருருளியில் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

பூரந்தன் உமையாள்புரத்தைச் சேர்ந்த க.நவரட்ணம் (வயது56) என்பவரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவராவார். தமிழீழ வீதிப் போக்குவரத்துக் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணையினை மேற்கொண்டதுடன் பாரவூர்தியினையும் சாரதியினையும் தடுத்து மேலதிக விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ,கு)

# சென்ஜோன்ஸ் படைப்பிரிவின் சமூக நலப் பயிற்சி நெறி

(கண்டாவளை)

சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் படைப்பிரிவினால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து சுகாதார திணைக்களத்தினூடாக ஏ.எஸ்.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்படும்சமூகநலப் பயிற்சி நெறி கடந்த 21,22 ஆம் திகதிகளில் கண்டாவளை கோட்டத்தில் கிளி.பிரமந்தனாறு மகாவித்தியாலயம், கிளி.தருமபுரம் ம.வி ஆகிய பாடசாலைகளில் நடைபெற் றது.

இப் பாடசாலைகளில் 50 இற்கு மேற்பட்ட மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து பயன் பெற்றனர். இப்பயிற்சி நெறியில் முதலுதவிச் செய்முறைகள், தொற்றும் நோய்கள் எனப் பல விரிவுரைகள் வழங்கப்பட்டதுடன் முதலுதவி தொடர்பான கைந்நூல்கள், அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் மாணவர்கள்,ஆசிரியர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் பயிற்சியை முடித்த இரு பாடசாலைகளுக்கு முதலுதவிப் பெட்டிகள். மருந்துகள், உபகரணங்கள் என்பனவும் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் வழங்கப்பட்டன. (14)


## கடைத்தொகுதிகளை அகற்ற வேண்டுகை

(ஸ்கந்தபுரம்)

ஸ்கந்தபுரம் சந்திப்பகுதியில் கடைத்தொகுதிகள் வீதியின் அருகாக அமைக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்தில் ஈடுபடும் பொது மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஸ்கந்தபுரம் அங்காடியுடன் இணைந்து அமைந்துள்ள கடைத்தொகுதியே இவ்வாறு காணப்படுவதால் இவற்றை பின் நகர்த்தி சீரான போக்குவரத்திற்கு வழிசெய்யுமாறு இப் பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றனர். (15)

# கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிகளின் ஆக்கப்பொருட் கண்காட்சி

## -பூநகரியிலும் சிறப்புற நடைபெற்றது



(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளைப் பிரதேச முன்பள்ளிகளின் ஆக்கப்பொருட் கண்காட்சி நேற்று முன்தினம் சிறப்புற நடைபெற்றது.

கண்டாவளைப் பிரதேசத்தில் இயங்கிவரும் 26 முன்ட'ள்ளிகளை ஒருங்கிணைத்து நடாத்தப்பட்ட இக் கண்காட்சி நிகழ்வு நேற்று முன்தினம் தருமபுரத்தில் இயங்கிவரும் தொழில்நுட்பக் கல்லூரிக் கிளை மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் 26 முன்பள்ளிகளைச் சேர்ந்த 892 மாணவர்களின் கைவண்ணங்களில் உருவான ஆக்கப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. முன்னதாக இந் நிகழ்வை ஆரம்பிக்கும் முகமாக தமிழீழ தேசியக் கொடியினை விசுவமடு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பு.திலகன் ஏற்றிவைக்க தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடி, முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக்கொடி, கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனக்கொடி என்பவற்றை அந்தந்த நிறுவனத்திலிருந்து வருகை தந்த பிரதிநிதிகள் ஏற்றி வைத்தனர். அடுத்து ஆக்கப்பொருட் கண்காட்சி மண்டபத்தினை கிளிநொச்சிக் கோட்டமுன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவநாதன் நாடாவை வெட்டித்திறந்துவைக்க, மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த காட்சிப் பொருட்களை பெருந்தொகையான பொதுமக்கள், போராளிகள், சமூகச்சேவை நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் சென்று பார்வையிட்டனர்.

இதே போன்று பூநகரிப் பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழக வளாகத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இதில் 17 முன்பள்ளிகளின் சிறார்களால் உருவாக்கப்பெற்ற கைத்திறன் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. (ச)

# முல்லை கடற்புலிகள் பிரதேசத்தில் தேசிய எ.பே. கருத்தரங்கு

கடற்புலிகளின் முல்லை மாவட்டத்திற்குட்பட்ட பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைகளுக்கான சமகால கருத்தரங்கு கடந்த 20ஆம் திகதி கடற்புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர் அருணாசலம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் சமகாலக் கருத்துக்களை கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் ம.ரங்கன், கடற்புலிகளின் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் மகேந்திரன், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அருணாசலம் ஆகியோர் நிகழ்த்தினர். இதில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலை தொடர்பாக விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊரகக்கிளையினர், தேசிய எழுச்சிப்பேரவையினர் அனைவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# எதிரியின் இராணுவ நெருக்கடிகளை முறியடித்து சமாதானப் பாதையில் முன்செல்கின்றோம்

## -'தாய் மடியின் தாலாட்டு' ஒலிப்பேழை வெளியீட்டில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

இராணுவ நெருக்கடிகளை எதிரி எம்மீது ஏற்படுத்திய வேளையில், அதனை இராணுவரீதியில் எதிர்கொண்டு ஒரு சமாதானப் பாதையில் முன்செல்கின்றோம் என்று யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.


களத்திலே காவியமாகிய எல்லைப் படைவீரர்களின் நினைவுகளைத் தாங்கிய தமிழீழ விடியல் இசைக்குழுவின் 'தாய் மடியின் தாலாட்டு' ஒலிப்பேழை வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பகீரதன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டுரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கைத் தீவில் மாறிமாறி ஆட்சிக்கு வரும் இனவாதக் கட்சித் தலைவர்கள் தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற கருத்தில் ஒன்றாகவே இருந்துவருகிறார்கள். அவர்கள் கையாளும் அணுகுமுறையே வேறுபட்டதாகவுள்ளது. இவற்றைத் தமிழீழ தேசியத் தலைவரது வியூகமும், தமிழ் மக்களும் முறியடித்து வருகிறார்கள்.

எமது மக்கள் அரசியல் வேட்கையும், சுதந்திர உணர்வும் கொண்டவர்களாக உள்ளனர். இதனால் எமது போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாகவே களத்தில் நாம் 322 எல்லைப்படை மாவீரர்களை இழந்து நிற்கின்றோம். அவர்களது நினைவாக வெளியிடப்படும் இந்த ஒலிப்பேழை அவர்களது பிள்ளைகளுக்கும், பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் ஒரு கௌரவத்தை கொடுத்துள்ளது.

எதிரியானவன் இராணுவ நெருக்கடியை எம்மீது போட்டபோது அதனை






இராணுவ ரீதியாக எதிர்கொண்டு ஒரு சமாதானப் பாதையை முன்னெடுத்துச் செல்கின்றோம். இக் காலகட்டத்தில் ஆயுதம் எதுவுமின்றி நடமாடும் எமது போராளிகளை மட்டக்களப்புப் பகுதியில் எதிரியானவன் கொலை செய்து வருகின்றான். அவர்கள் ஆயுதம் தரித்துக் களத்தில் நின்றபோது அவர்களை அணுக முடியாத எதிரியானவன் சமாதான காலத்தில் இவ்வாறான செயல்களைச் செய்கிறான். இதனால் அப்பகுதி மக்கள் கொதிப்படைந்துள்ளனர். எமது போராளிகளைக் காப்பவர்கள் எமது மக்கள். எமது மக்களின் தெளிவானபோக்குத்தான் எமது போராட்டத்தை உயர் நிலைக்குக் கொண்டுவந்துள்ளதெனக் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வின் முதன் நிகழ்வாக பொதுச்சுடரினை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ். மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமயவன், மாவீரர் கப்டன் காளிக்குட்டி, லெப். கண்ணா ஆகியோரின் தாயார் சதாசிவம் கமலாதேவி, யாழ். பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவ ஒன்றியத் தலைவர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக்கொடியினை நல்லூர்ப் பிரதேச மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூமகள் ஏற்றினார். அதனைத்தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

வரவேற்புரையினை யாழ். பல்கலைக் கழக மாணவன் புவிராஜ் நிகழ்த்தினார். தலைமை உரையினைத் தொடர்ந்து சிறப்புரையை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் கந்தசாமி ஒலிப்பேழையை வெளியிட்டு வைக்க, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியை யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் வழங்கினார். அதனைத் தொடர்ந்து மதிப்பீட்டுரையை எழுத்தாளர் யோகநாதன் நிகழ்த்தினார். ஏற்புரையை பாடலாசிரியர் போராளி செங்கதிரும், நன்றியுரையை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் சிவகரனும் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வின் சிறப்புரையை நிகழ்த்திய பா.ம உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் "தமிழர்களது பாரம்பரியத்தில் கலைகள் பின்னிப்பிணைந்ததாகவே தொன்று தொட்டு காணப்பட்டு வந்தன. அதன் ஓர் வடிவமாகவே இவ் ஒலிப்பேழை வெளியீடு அமைந்துள்ளது. எம்மைத் தற்போது போர் மேகம் சூழ்ந்துள்ளது. அரசாங்கம் வெளிப்படையாக சமாதானத்திற்கு தான் தயார் எனக் காட்டிக் கொண்டு தன்னைப் போருக்குத் தயார்ப்படுத்தி வருகின்றது.எனவே நாங்களும் இரண்டுக்கும் தயாராக இருக்கவேண்டும். இன்று எமது இளைஞர்கள் யுவதிகளிடையே கலாசரராச் சீரழிவு மேலோங்கிக் காணப்படுகிறது இவற்றை எதிரி திட்டமிட்டவகையில் மேற்கொண்டு வருகின்றான். முன்னர் தமது தாய் தந்தையின் வழிநடத்தல்கள் மத்தியில் வாழ்ந்தவர்கள் இன்று தமது சிந்தனைகளை வேறு வழியில் திசை திருப்புகின்றனர். எனவே இளைஞர்கள் தமது திறனை வெளிப்படுத்த இந்த ஒலிநாடா களம் அமைத்துக் கொடுத்துள்ளது." எனக் குறிப்பிட்டார். (36)

# அல்வாய் வடக்கில் வீரமுரசு நிகழ்வு

பருத்தித்துறையில் அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலைய மைதானத்தில் ஞாயிறன்று வீரமுரசு நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வு தே.எ.பேரவை செயலர் அருமைத்துரை தலைமையில் நடைபெற்றுள்ளது. இதில் பொதுச் சுடரை மாவீரர் யாழ்மொழியின் தாயார் பூபதியும், வடமராட்சி மகளிர் பொறுப்பாளர் அன்புவும் ஏற்றினர்.

தே.எ.பேரவை உறுப்பினர் கிருஸ்ணசிங்கம் ஈகச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். அக வணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வு முன்பள்ளி சிறார்களின் நடன இசை விருந்துடனும் வன்னி கலைபண்பாட்டுக் கழகத்தினரின் சங்கநாத நிகழ்வுடனும் முடிவடைந்தது.

# தரமுயர்த்தப்பட்டகொடிகாமம்வைத்தியசாலைக்கு மருத்துவர், பணியாளர்களை நியமிக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

கொடிகாமம் வைத்தியசாலை தர முயர்த்தப்பட்டுள்ளதால் இம் மருத்துவமனைக்கு மாவட்ட வைத்தியசாலைக்குரிய வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர், புள்ளிவிபர அதிகாரி ஆகியோரை உடனடியாக நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம் மருத்துவமனையின் அபிவிருத்தி சம்பந்தமாக திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இதனால் கொடிகாமம் பிரதேச மக்கள் பூரண நன்மை அடைவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது அவசர தேவைகளுக்காகச் சாவகச்சேரி வைத்திய சாலைக்குச் செல்லும் நிலை இருப்பதாகவும், கொடிகாமம் வைத் தியசாலை இயங்கும் பட்சத்தில் மக்கள் இலகுவாக பயனடைய முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

# தென்மராட்சியில் குழு மோதல்களைத் தவிர்க்க பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை அழைப்பு

(தென்மராட்சி)

கைதடி, நாவற்குழி பிரதேசங்களில் அடிக்கடி இடம்பெறும் கோஷ்டி மோதல்களைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கைதடி, நாவற்குழி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

தென்மராட்சிப் பகுதிகளில் அதிகளவில் கோஷ்டி மோதல்கள் இடம்பெறும் பகுதியாக கருதப்படுவது கைதடி நாவற்குழிப் பிரதேசமாகும். இப் பகுதியில் பொது நிகழ்வுகள், கோயில் திருவிழாக்கள், சாராயக்கடைகள் போன்றவற்றில் தொடங்கும் வாய்த தர்க்கங்கள் இறுதியில் கோஷ்டிக் கலவரமாக மாறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் நடைபெறும் சம்பவங்கள் சமூக அமைதிக்கும், நல்லிணக்கத்திற்கும் பெரும் சவாலாக விளங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.இது முளையிலேயே கிள்ளியெறியப்பட வேண்டும் என கைதடி, நாவற்குழிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மற்றும் இப்பகுதியில் சட்ட விரோதமாக மண் அகழ்வது, கசிப்புக் காய்ச்சுவது, விற்பனை செய்வது போன்றவற்றை முற்றாகத் தடுக்கவேண்டுமெனவும் இதற்கான நடவடிக்கைகளை அரசியல் துறையினர் மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

# மின்சாரம் வழங்கக் கோரல்

(தென்மராட்சி)

படித்த மகளிர் குடியேற்றத்திட்டத்திற்கு உடனடியாக மின்சாரம் வழங்கக்கோரி, இப்பகுதி மக்கள் பல தரப்புக்களுக்கும் மகஜர்களை அளித்திருப்பதாகத் தெரியவருகிறது.

1990 இற்குப் பின்னர் ஏற்பட்ட வன்செயல்களினால் இடைநிறுத்தப்பட்ட மின்சாரத்தை மீண்டும் தங்களுடைய பகுதிக்கு வழங்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கை மின்சாரசபை மற்றும் தென்மராட்சி பிரதேச செயலாளர், யாழ்.அரசாங்க அதிபர் மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் வழங்கிப் பல மாதங்கள் ஆகியும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## -காணாமல் போனோர் தொடர்பான விசாரணை-

# இராணுவ அதிகாரி ஒருவர் நீதிமன்றில் ஆஜராக மறுப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கொடிகாமம் பகுதியில் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தால் கைதாகிக் காணாமல் போனமை தொடர்பில் குற்றம்சாட்டப்பட்ட படை அதிகாரியொருவர், தான் விசாரணைக்காக நீதிமன்றில் சமூகமளிக்க முடியாதுள்ளதாக அறிவித்துள்ளார்.


சிறுநீரக சத்திர சிகிச்சைக்காகத் தான் இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்படவுள்ளதால் யாழ். மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜராக முடியாதுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதியில் கொடிகாமம் பகுதி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரியாக விருந்த கேணல். மகிந்த ரட்ண என்பவரே இவ்வாறு நீதிமன்றிற்கு அறிவித்துள்ளார்.

வேலுப்பிள்ளை உதயகுமார்(வயது 27) என்பவர் இவரால் கைதாகி காணாமல் போனதாக அவரது தந்தையாராகிய கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை ஆட்கொணர்வு மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணையின்போதே மேற்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது.விசாரணை ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.





யாழ்.திருநெல்வேலி கலட்டிச்சந்தியில் சிறிலங்கா இராணுவத்தால் நடத்தப்பட்டு வந்த அப்ப வியாபார நிலையத்தினைக் கடந்த ஞாயிறன்று சூழ்ந்து போராட்டம் நடத்தும் பல்கலை மாணவர்களையும் மற்றும் பொது மக்களையும் இறுதியில் இராணுவத்தால் அகற்றப்பட்ட அப்பக்கடையையும் படங்களில் காண்க.. (36)

# ஆதவனின் அனுபவப் பகிர்வுகள்

என் அன்பு வாசகர்களே...! சோவியத் யூனியனின் தலைநகரம் 'மொஸ்கோவில்' நிற்கிறேன். அந்த ஹோட்டல் காவலாளி தன் AKயால் என் நெஞ்சை வருடுகிறான். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

நான் ஒரு மெல்லிய 'சேர்ட்' அணிந்திருந்தேன். பனி கொட்டிக் கொண்டிருக்கும் வேளையில் மெல்லிய 'சேர்ட்' அணிவது அந்தக் காலத்து Heroism என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

அவன் 'என் 'சேர்ட்' மேல் 'பொக்கற்றைக்' குறிவைத்து... தன் AKயின் சுடுகுழலால் அதையே நெருடினான்.

என் 'பொக்கற்றினுள்' ஒரு 'MALBAROW' சிகரட் 'பைக்கற்' உடைக்காமல் இருந்தது. அவன் தன் AKயால் அதைத்தான் தட்டினான். நான் உடனே அதை எடுத்து அவனிடம் கொடுத்தேன்.

என்னே அதிசயம்!

அவன் ' அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

அதேகதியில் மீண்டும் வந்தான். என்னைத் தன்னுடன் வருமாறு அழைத்தான். நானும் சென்றேன்.

வெளியே மூன்றாவது 'பஸ்' தன்னை நிறைத்துக் கொண்டிருந்தது.

இவன் சாரதியிடம் ஏதோ சொன்னான். சாரதி புன்னகைத்தான்.

எனக்கு முன் 'சீட்டில்' இடம் கிடைத்தது.

ஒரு 'சிகரட் பைக்கற்' செய்யிற வேலை. அதுவும் பொதுவுடமை நாட்டில் ...

வாழ்க...வாழ்க...பாட்டாளிகள்.

* * * *

இப்போது எனக்குச் சில மந்திரங்கள் புரிபடத் தொடங்கின. எனது Bag கினுள் ஒரு MALBA ROW BANDLE இருந்தது. அதை உடைத்தேன். .ஒரு 'பைக்கற்'ஐ சாரதியிடம் கொடுத்தேன்.

என்னை ஒரு V.I.P.(Very Important Person) போல் நடத்தினான்.

எந்தக் 'கியூ'விலும் நான் பின் வரிசையில் நிற்கவில்லை.

சரி,அதை விடுவோம்.

சோவியத் யூனியன் பற்றி இதுவரை உங்களுடன் எதிர்முகமாகவே பேசினேன்.

அங்குள்ள சிறப்பம்சம் பற்றிக் கூறவில்லையே எனச் சிலர் முணுமுணுப்பது கேட்கிறது.

சொல்கிறேன்.

அற்புதமான கட்டடக்கலை அங்குண்டு. 'மொஸ்கோ' வின் தொடருந்து நிலையங்கள் அற்புதமானவை. அதன் சுவர்களில் அழகான ஓவியங்கள் இருக்கின்றன. மிகவும் கரிசனையுடன் தீட்டப்பட்டவை.

'கிரெம்ளின்' பாராளுமன்றம் அந்தக்காலத்தில் பலராலும் சிலேகிக்கப்பட்ட, உலகிலேயே அழகியது எனச் சொல்லப்பட்ட பாராளுமன்றம் அது.

அதற்கு முன்னுள்ள திடல் என்னை மிகவும் கவர்ந்தது. பரந்து...விரிந்து... புறாக்கள் பறக்க... அமைந்திருந்தது அது. அதற்கு முன் ஒரு நீரோடை அல்லது கால்வாய் என்று சொல்லலாம்.

அது எந்த நதியின் கிளை என்று தெரியவில்லை. ஆனால்-

"டான் நதி அமைதியாகப் பாய்கிறது" என்ற 'Mikel Sholokov' வின் நாவல் படித்திருக்கிறேன்.

இலங்கை என்றால் 'மாகாவலி' கங்கை என்பது போல்...

எகிப்து என்றால் 'நைல்நதி' என்பது போல்...

இந்தியா என்றால் 'கங்கை' என்பது போல்...

சீனா என்றால் 'யாங்சி' என்பது போல், லண்டன் என்றால் 'தேம்ஸ்' என்பது போல், Paris என்றால் 'செயின்' என்பது போல், ரஷ்யா என்றதும் 'டான்' நதி நினைவு வருகிறது. அழகிய நதி அது.

அதனுடைய கிளையாகவோ அல்லது கால்வாயாகவோ இருக்கலாம்.

'லெனின் சதுக்கம்'... அதனுள் போனேன். இப்பொழுது அந்த இடம் St.Petersberg எனப் பெயர் மாற்றப்பட்டுவிட்டது.

'லெனின் சதுக்கம்'... இதன் முன்பு பெரிய ஒரு லெனின் சிலை இருக்கிறது. அண்ணாந்து பார்த்த பொழுது... அந்த மாமேதையும் அவன் நடத்திய போராட்டங்களும் ஒருகணம் மனதில் விரிந்தது. 'புஸ்கின்' என்கிற உலகப் புகழ்பெற்ற கவிஞன் எழுதிய 'லெனின்' என்கிற கவிதை நூலை நான் படித்திருக்கிறேன்.

அந்த நூலின் ஆரம்பமே என்னை நன்றாகக் கவர்ந்தது.

"The time has come
I begin the story of lenin"

(நேரம் வந்துவிட்டது. நான் லெனினின் கதையை ஆரம்பிக்கிறேன்.)

என அந்த நூல் ஆரம்பிக்கிறது.

சிலையைப் பார்த்துவிட்டு உள்ளே போனேன். உள்ளே நான் என் வாழ் நாளில் மறக்க முடியாத ஒருகாட்சியைப் பார்த்தேன்.

அங்கே ஒரு கண்ணாடிப்பெட்டியினுள் லெனின் படுத்துக்கொண்டிருந்தார். மேனி ஒருதடவை புல்லரித்தது. இறந்துபோன லெனினின் உடலை பழுதடையாத வண்ணம் அழகாகப் பராமரித்து அந்தப் பெட்டியினுள் வைத்திருந்தார்கள். உயிருடன் உறங்கிக் கொண்டிருப்பது போல் அது காட்சியளித்தது. தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் ரஷ்சியர்கள் உட்பட வந்து லெனினின் உடலைப் பார்த்து தமது மரியாதையைச் செலுத்திச் சென்று கொண்டிருந்தார்கள்.

லெனின் சதுக்கத்தைவிட்டு வெளியேவர மனமில்லாமல் வந்தேன். அவ்வளவு அழகாக அது காட்சியளித்தது.

* * * *

வாசகர்களே...

காலம் உருண்டோடியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலாலும், சோவியத் யூனியனுக்குள் நடந்த உள்நாட்டுக் கலவரங்கள், தத்துவ மோதல்கள், வறுமை போன்ற இன்னும் பல காரணங்களினாலும் சோவியத்யூனியன் உடைபடத் தொடங்கியது.

'மொறிஸ் யெல்சின்' பதவிக்கு வந்த பொழுது பெரிய கலவரங்கள் மொஸ்கோவில் நடந்தன. உலகம் முழுவதுமே பார்த்துக் கொண்டிருந்தது. நானும் டென்மார்க்கில் இருந்துகொண்டு தொலைக்காட்சியில் சோவியத் யூனியனின் சிதைவைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

எந்த 'டான்' நதியின் அழகையும், 'கிரெம்ஸின்' மாளிகையின் வனப்பையும், லெனினின் சதுக்கத்தின் உன்னதத்தையும் நான் கண்டு இரசித்து வாழ்நாளிலேயே மறக்க முடியாத உணர்வு என நினைத்தேனா... அந்த இடங்கள் எல்லாம் ஒரே புகை மண்டலம்... கட்டடங்கள், பூங்காக்கள் எல்லாம் சிதைக்கப்பட்டன.

புல்டோசர்கள், டாங்கிகள், கவச வாகனங்கள் 'லெனின் சதுக்கத்தில்' அங்கும் இங்கும் ஓடித் திரிந்தன. பூக்களைக் கூட நசித்து, அழகிய செடிகள் கூடப் பிய்த்து எறியப்பட்டன.

அப்பொழுது திடீரென ஒரு சம்பவம் நடந்தது. அதை அதிசயம் என்றும் சொல்லமுடியாது. ஆச்சரியம் என்றும் சொல்லமுடியாது. வார்த்தைகளில் விபரிக்க முடியாத... உலகவரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய கசப்பான காட்சி என்று அதைச்சொல்லலாம்.

ஏழு அல்லது எட்டு 'கிறெய்ன்'கள் வந்தன. வந்து அந்த மாபெரும் லெனினின் சிலையைச் சுற்றி நின்றன. மாமேதை லெனின் என்றும், அடக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்றும், சென்ற நூற்றாண்டின் ஒப்பற்ற தலைவன் என்றும் வர்ணிக்கப்பட்ட லெனினின் சிலையை நோக்கி பாரிய சங்கிலிகள் வீசப்பட்டன. சிலை பிணைக்கப்பட்டது. மூன்று பெரிய 'புல்டோசர்கள்' சிலையின் அடிப் பாகத்தை இடிக்கத் தொடங்கின.

கொஞ்சங்கொஞ்சமாக அந்தச் சிலை சரியத் தொடங்கியது. பல மில்லியன் கணக்கான மக்கள் தொலைக்காட்சியிலும், நேரடியாகவும் பார்த்துக்கொண்டிருக்க... அந்த ஏழைப் பங்காளன் லெனின் சரிந்தான். அந்தச் சிலையை நான் நேரே பார்த்தபோது எவ்வளவு ஆனந்தப்பட்டேனோ, அதற்கு நேர் எதிர்மாறான உணர்வை அந்தச் சிலை சரிந்தபோது உணர்ந்தேன்.

ஒரு பெரிய ஆலமரம் சரிந்தது போல அது சரிந்தது. பொதுவுடமைவாதம் சரிந்துவிட்டது என முதலாளித்துவவாதிகளும், ஏகாபத்தியவாதிகளும் குதூகலித்தார்கள். உலகிலுள்ள அடக்கப்பட்டவர்கள் கண்கலங்கினார்கள். கலங்கரை விளக்கம் தெரியாத மாலுமிகள் போல் சமுத்திரத்தில் தத்தளித்தது பொதுவுடமைவாதிகளின் நெஞ்சம்.

ஆம், இதற்குப் பின்னர், சோவியத் யூனியன் என்ற பெயரே அழிந்துவிட்டது. சோவியத் யூனியனில் இருந்து நாடுகள் பல பிரிந்து சென்றுவிட்டன. புதிய புதிய நாடுகள் உருவாகத் தொடங்கின. 'லெனின் கிராட்' என்ற பெயர் 'சென் பீற்றர்ஸ் பேர்க்' என்று பெயர் மாறலாயிற்று.

உள்ளே இருந்த அழகிய லெனினின் உடலுக்கு என்ன வாயிற்று என்று தெரியவில்லை.

உலகவரைபடத்தில் புதிய நாடுகளின் எல்லைகள் உருவாயிற்று. புவியியல் பாடப்புத்தகங்களில் 'லித்தோவன்', 'லித்வேனியா' என புதிய நாடுகள் பற்றிய அறிமுகங்கள் இடம்பெறலாயின. ரஷ்யா வறுமையில் வாடியது. வறுமையைச் சரிக்கட்ட தன் போர் விமானங்களை ஆகக்குறைந்த விலையில் மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்கத் தொடங்கியது. சிறிலங்கா அரசாங்கமும் மலிவு விலையில் விமானங்களை வாங்கி இன அழிப்பு வேலையில் ஈடுபட்டது. ஒருகாலத்தில் விமானசேவையில் கோலோச்சிக் கொண்டிருந்த 'AEROFLET' விமானங்களை பழைய இரும்புக்கடைகளில் விற்பதுபோல ரஷ்யா விற்றுத் தள்ளியது.

செஸ்னியாவும், ரஷ்யாவும் பலத்த சண்டையில் ஈடுபடலாயின. ரஷ்யா செஸ்னியாமீது குண்டுமழை பொழிந்து செஸ்னிய மக்களையும் கட்டடங்களையும் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியது. இன்னமும் இந்தப் போர் ஓய்ந்தபாடில்லை.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பிறகு அதனையே நம்பி அண்டி வாழ்ந்த கிழக்கு ஐரோப்பியப் பொதுவுடமை நாடுகள் வீழ்ச்சியடையத் தொடங்கின. போலந்து வீழ்ச்சிகண்டது. 'பேர்லின் லுண்டா' சந்தைக்கு நான் போயிருந்தபோது போலந்து நாட்டின் விலைமதிப்பற்ற கலைப்பொக்கிஷங்களான ஓவியங்கள் கொள்ளை மலிவில்

## பகுதி-09

தெருவோரத்தில் விலைபோவதைப் பார்த்தேன்.

பல்கேரியா எனும் பொதுவுடமை நாடு முற்றாகவே வீழ்ந்துவிட்டது. அதன் அழகிய தலைநகரம் 'சோபியா' சோபையிழந்துவிட்டது. பல பல்கேரிய இளம பெண்கள் விபச்சாரத் தொழில் செய்வதற்காக... மேற்கு ஐரோப்பாவிற்குப் படையெடுத்து வருகிறார்கள்.

ஒருதடவை நான் சுவிற்சர்லாந்திற்குச் செல்லும் பொழுது விமானத்தில் எனக்கு அருகில் ஒரு அழகிய இளம்பெண் இருந்தாள்.

"where are you from (நீ எங்கிருந்து வருகிறாய்)" எனக் கேட்டேன்.

"பல்கேரியா" என்று சொன்னாள்.

"நீ என்ன வேலை செய்கிறாய்?"

"நான் பிஸ்னஸ் செய்கிறேன்" என்றாள்.

"என்ன பிஸ்னஸ்" என்று கேட்டேன்.

"Body Business (உடல் வியாபாரம்)" என்றாள் எந்தவித சலனமும் இல்லாமல்.

நான் அவள் கண்களை நேரே பார்த்தேன்.

(அடுத்தவாரம் சந்திப்போம்)

# மின்சாரம், பேருந்து ,தொடருந்துக் கட்டணங்கள் அடுத்த சில வாரங்களில் அதிகரிக்கும்

## நிதியமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

மின்சாரம், பேருந்து, தொடருந்துக் கட்டணங்கள் அடுத்த சில வாரங்களில் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் டி.பி.ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: மின்சாரக்கட்டணம் ஐந்து வீதத்தால் அதிகரிக்குமெனவும், இந்த மின்சாரக் கட்டண அதிகரிப்பு வீட்டுப்பாவனைக்கு மட்டுமே எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கட்டணம் ஏழு தொட [illegible]கம் எட்டு வீதத்தால் அதிகரிக்க[illegible]படுமெனவும் தெரிவித்துள்ளதுடன் பேருந்துக்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பாக அரசு கூடிய கவனம் எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# சிறிலங்கா அரசு தயாராகிறது!

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றியமைப்பது மற்றும் தேர்தல் முறைகளை மாற்றியமைப்பது சம்பந்தமாக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. தொகுதிவாரியான தேர்தல் முறையை மீண்டும் அமுற்படுத்த அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன என்று லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

# அரசுக்கு ஐ.தே.க. நிர்ப்பந்தம்

சிறிலங்காவில் சமாதான நடவடிக்கைகளுக்கு வளமான அர்த்தமுள்ள வகையில் ஆதரவளிக்க வேண்டுமானால் ஐ.ம.சு.கூட்டணியரசின் சமாதானத் திட்டம் பற்றி விளக்கமளிக்க வேண்டும் என ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது. இந்நாட்டின் இனப்பிரச்சினையை தேசிய பிரச்சினையாக ஐ.தே. கட்சி கருதும். அதேவேளை சமாதானத்துக்காகக் கட்சி பூரண ஆதரவை வழங்கும் என்றும் உறுதியளித்திருக்கின்றது. இதற்கிடையில் இடைக்கால நிர்வாகம் வழங்குவது தொடர்பாக ஐ.தே.கட்சியின் நிலைபற்றிய 13பக்க அறிக்கை விரைவில் வெளியிடப்பட இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

# இணையத்தளக் கேபிளை உடைத்த கப்பல் மீது ரெலிக்கொம் வழக்கு

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம்மின் ரி.எம்வி மூன்று எனப்படும் கேபிளை உடைத்தமைக்கு எதிராக இந்தியக் கப்பலான 'ஸ்ரேட் ஒவ் நாகலண்ட்' என்ற கப்பலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை சிறிலங்கா ரெலிக்கொம் கொழும்பு மாவட்ட 'மாஜிஸ்ரேட்' நீதி மன்றத்திலேயே தாகல் செய்துள்ளது. இந்த வழக்கில் சிறிலங்கா ரெலிக்கொம் இந்தக் கேபிளை உடைத்ததன் மூலம் இலங்கையில் சுமார் 8 இலட்சம் பேருக்கான இணையத்தள வசதிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் இவற்றை ஈடு செய்ய 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நஷ்ர ஈடாக வழங்கப்படவேண்டும் எனவும் அது தனது மனுவில் கோரியுள்ளது.

மேற்படி கப்பல் கல்கிசை கடற்பரப்பில் நங்கூரத்தைப் பாய்ச்சும் போதே இச்சம்பவம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கமைய மேற்படி கப்பலை கொழும்பிலேயே தடுத்து வைக்குமாறும், அதன் உரிமையாளரை எதிர்வரும் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை தடைபட்டுள்ள இணையத்தளத்தின் சேவை இன்று முதல் வழமைக்குத் திரும்பும் எனவும் கூறப்படுகிறது.



02 ஆம் ஆண்டு நினைவலைகள்
காதில் அந்த செய்தி வந்த
காலம் இரண்டானதுவோ– எங்கள்
தானைத் தளபதியே உந்தன்
தான் தொடரும் வேங்கைகள் நாம்
கூடுகின்றோம் நினைவு இன்று.
குமுறுகின்றோம் உனை இழந்து
வாடினினும் உன் வழித்திறத்தை
வணங்கிப்பணி தொடருகின்றோம்...
கேணல் ராயு (குயிலன்)
அம்பலவாணர் நேமிநாதன்
ஏழாலை தெற்கு, யாழ்
மண்ணில் மலராக
30-05-1961
மண்ணில் விதையாக
25-08-2002
கனினிப்பிரிவு போராளிகள்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

**16**

*. அருமை கல்விக்கூட போராளிகளின் அறிவியல் கண்காட்சி மற்றும் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

*. தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ஐரோப்பிய ஒன்றியம்' மற்றும் பிரித்தானிய, நெதர்லாந்துத் தூதுவர்கள் சந்தித்தனர்.



தூதுவர்களுடன் சந்திப்பு

*.கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் ஈ.பி.டி.பியின் முக்கியஸ்தர் பாலநடராஜ ஐயர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலி.

*. சமாதானத்தை வலியுறுத்தி நோர்வே தூதரகம் முன் மறியல் போராட்டம் இடம் பெற்றது.

**17.** முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ஆயுதங்களை இறக்கிக்கொண்டிருந்த றோலர் படகைப் பார்வையிட முற்பட்ட இலங்கைப் போர்நிறுத்தக் காண்காணிப்புக் குழுவினரைத் தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்ததாக சிறிலங்கா இராணுவம் தெரிவித்தமை உண்மைக்குப் புறம்பானதென போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

*.நாட்டுப்பற்றாளர் இரத்தினத்திற்கு யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.



நாட்டுப்பற்றாளருக்கு இறுதி வணக்கம்

**18**

*. சிறிலங்கா இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாக இணைந்து வாழைச்சேனை நகர்ப்பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பகுதியிலும் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

*. தேர்தலில் அடையாள அட்டையைக் கோருவதற்கு முன் தேர்தல் ஆணைக் குழுவை அமைக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

*.அரசின் புகையிரத சேவையை தனியார் மயப்படுத்தல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து புகையிரதசேவை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

*.நாட்டுப்பாற்றாளர் இரத்தினத்திற்கு யாழ். குடாநாட்டில் இறுதி அஞ்சலி செலுத்தப் பட்டது.

*.நுவரெலியா மத்துரட்ட அல்மா என்ற இடத்தில் பொலிசாரின் தாக்குதலில் தமிழர் ஒருவர் உயிரிழந்தார்.

*. புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிக்க முனைந்தால் ஜே.வி.பி கட்சியினர் உண்ணாவிரதமிருந்து உயிரைத் துறப்பர் என அக்கட்சியினர் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவிப்பு

* எழுதுமட்டுவாள் பகுதியில் பெண் இராணுவச் சிப்பாய் ஒருவர் தனக்குத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்தார்.

**19**

பாராளுமன்ற அவை அமர்வு நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*.சட்டமா அதிபர் திணைக்களத்தின் அசமந்தப்போக்கினால் நிமலராஜன் கொலை வழக்கு முடங்கிப் போகலாமென பாதிக்கப் பட்டோர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவிப்பு.

*.மூதூரில் கிரனேட் வீச்சில் ஓய்வுபெற்ற அதிபர் பலி

*. **20.**

மட்டக்களப்பு காயாங்கேணி சிறிலங்கா இராணுவ முகாமிற்கு அருகே முல்லாவிச் சந்தியில் ஆயுததாரிகள் நடத்திய கிளைமோர் மற்றும் துப்பாக்கித் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு, பெண் போராளி ஒருவர் காயமடைந்தார்.

*. யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து சனாதிபதி சந்திரிகாவின் உருவப்படத்தை அகற்றினர்.



*. யாழ். பாதுகாப்புப் படைத்தலைமையகக் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் பதவியேற்றார்.

*.பேச்சுக்களில் நோர்வேயினது பங்களிப்பு தேவையில்லையெனில் ஒதுங்கத் தயாரென இலங்கையிலுள்ள நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் தெரிவிப்பு.

*. தொண்டமனாறு கடல் நீரேரிப் பகுதியில் குளிக்கச்சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணம்.




*. இடைக்கால நிர்வாகம் குறித்த அரசின் யோசனைகளில் முஸ்லிம் காங்கிரசின் யோசனைகளும் உள்ளடக்கப்பட வேண்டுமென முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு.

*. கல்முனை பொலிஸ் தலைமையகத்தில் கடமை புரியும் பொலிஸ் அதிகாரியான ஜயரட்ண இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலி.

**21**

வவுனியா நகர்ப்பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதை எதிர்த்து இராசேந்திரன்குளம் பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மக்கள் ஆர்ப்பாட்டம்

சனாதிபதி சந்திரிகா லண்டனுக்கு விஜயம்.

*. பிரதமருக்கான பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளை பாராளுமன்ற வளாகத்துக்குள் நுழையவிடாது தடுத்தமை குறித்து பிரதமர் மகிந்தராஜபக்ஷ சபாநாயகருக்கு முறைப்பாடு செய்தார்.

*. மட்டக்களப்பு மாங்கேணியில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் இரண்டு படையினர் காயமடைந்தனர்.

***22** "தாய்மடியின் தாலாட்டு" இசைப் பேழை அறிமுக விழா புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியம் வித்தியாசாலையில் இடம்பெற்றது.



அறிமுக விழாவில்

* 'இடம்பெயர்ந்த பெண்களின் குரல்' ஓர் சங்கம அரங்கு நல்லூரிலுள்ள பெண்கள் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது.

*.திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் விஜயம்.

*. லெப்.கேணல்கள் பாவா, யோகா ஆகியோரின் வித்துடல்கள் தாண்டியடியில் விதைப்பு. பெருமளவான மக்கள் இறுதி வணக்கம்.


*. இந்து சமுத்திர பிராந்திய ஒத்துழைப்பு மாநாடு கொழும்பில் ஆரம்பம்.

# ஊரக தேசிய எழுச்சிப் பேரவைகள் அக்கராயன் பிரதேசத்தில் அமைப்பு

(அக்கராயன்)


அக்கராயன் பிரதேச அரசியல் துறையினரால் அக்கராயன் பிரதேசத்தில் ஊரக தேசிய எழுச்சி பேரவைகள் அமைக்கப் பட்டுள்ளன.

அக்கராயன்-ஜயனார்புரத்தில் வன்னேரி வலயப்பொறுப்பாளர் எழில்குமரன் தலைமையில் நடைபெற்ற பேரவை அமைப்பு நிகழ்வில் செயலாளராக சு.நடராசலிங்கமும், 8 நிர்வாக உ்றுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். கண்ணகைபுரம் மேற்கு முட்கொம்பன் பிரதேசத்தில் அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலன் தலைமையில் நடைபெற்ற பேரவை அமைப்பு நிகழ்வில் செயலாளராக சு.ஜெயகாந்தனும், 8 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். வன்னேரி வலயத்தில் வலயப்பொறுப்பாளர் எழில்குமரன் தலைமையில் நடந்த பேரவை அமைப்பு நிகழ்வின் செயலாளராக கு.மகேஸ்வரனும், 8 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். ஸ்கந்தபுரம் பிரதேசத்தில் ஸ்கந்தபுரம் வலயப் பொறுப்பாளர் வண்ணத்தமிழ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செயல்ாளராக ம.தவராசாவும்,8 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டனர். தொடர்ந்தும் அக்கராயன் பிரதேசத்தில் இவ்வாறான பேரவைகள், குழுக்கள் அமைக்கப் படுமென அறியமுடிகின்றது (15)




முல்லை.மாவட்ட நுண்கலைக்கல்லூரியின் ஆவணி மாதத் தமிழிசை விருந்து 21.08.2004 புதுக்குடியிருப்பு நுண் கலைக் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் சிறப்பு தமிழிசை விருந் தினை சங்கீத பு.சணம் சு. கணபதிப்பிள்ளை நிகழ்த்துவதைப்படத்தில் காணலாம். (படம் :- தவரட்ணம்)

# நாகேந்திரபுரம் பொதுமண்டப கட்டட நிர்மாணிப்பில் குளறுபடி



நியாப் திட்டத்தினரால் நாகேந்திரபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொது மண்டபம் உடைவுகளுக்குள்ளாகி வருகின்றது.

அபிவிருத்திச் செயற்பாட்டுக்காக 2002 ஆம் ஆண்டு தெரிவான கிராமமாகிய நாகேந்திரபுரக் கிராமத்திற்கு 6 இலட்ச ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்ட பொதுமண்டபம் உடைவுகளுக்குள்ளாகி வருகின்றது.

இந்த மண்டபம் அமைக்கப்பட்டு, திறப்பு விழா செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக இன்னும் கையளிக்கப்படவில்லை. இந்த நிலையில் கட்டடம் அமைக்கப்பட்ட மிகக்குறுகிய காலத்திலேயே இக் கட்டடம் உடைவுகளுக்குள்ளாகி வருகின்றமை பெரும் கவலைக்குரியதெனத் தெரிவித்த அப்பகுதி மக்கள் சீமெந்துக் கலவைகளில் ஏற்பட்ட தரமற்ற தன்மையே இதற்கு காரணமெனவும் குறிப்பிடும் அதேவேளை உடைந்த கட்டடத்தின் பகுதிகளைக் கையினால் தட்டும் போதே அவை உடைந்து மணல்தன்மையை வெளிப்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர். (ச)

# கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம்,பரந்தன் (வ/து)

பதிவு இல:– பிஏ–047 பதிவுத் திகதி :–1971. 02. 10

41 ஸ்ரீ 7959 இசுசு நல்ல நிலையிலுள்ள பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை

**2004. 09. 09**

நல்ல நிலையிலுள்ள எமக்குச்சொந்தமான 41ஸ்ரீ7959 இலக்க பாரவூர்தியினைப் பகிரங்க ஏல விற்பனை மூலம் 2004.09.09 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பரந்தன் சந்தியில் உள்ள தலைமை அலுவலகத்தில் விற்பனை செய்யவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்பியவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிப்பு வைப்பு ரூபா ஆயிரம் (1000/=)செலுத்திப் பற்றுச்சீட்டினை பெற்றிருத்தல் வேண்டும்.

2004.08.25 ஆம் திகதி தொடக்கம் 2004.09.03 ஆம் திகதி வரை பரந்தன் சந்தியிலுள்ள தலைமை அலுவலகத்தில் மேற்படி பாரவூர்தியைப் பார்வையிடலாம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.ச,
பரந்தன்.

(சி.9792)



# பணிநிலை வெற்றிடம்

## க.வ.ப.நோ.கூ.சங்கம், பரந்தன்

01. பதவி :- பிரதம எழுதுநர்

சம்பளக்குறியீட்டு இல. :- 302/10

சம்பள அளவுத்திட்டம் :- (4750-100X10 - 110X10-6850) + (1250/=)

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத்திட்டத்தில் எழுதுநர்/கணக்குப் பதிவாளர் பதவியில் இரண்டு (02) வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது, கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற் குறிப்பிட்ட பதவிகளில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது,

ஆ. ஐக்கிய இராச்சிய நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந் திருத்தலுடன் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அல்லது க.பொ.த. (உ/த) மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தலுடன் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் குறிப்பிட்ட பதவியில் இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 21-45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

02. பதவி :- காசாளர்

சம்பளக்குறியீட்டு இல. :- 306/11

சம்பள அளவுத்திட்டம் :- (4500-90X10 - 100X10-6400) + (1250/=)

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத் திட்டத்தில் காசாளர்/ வியாபாரத்துறையில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது, 13ஆவது சம்பளத்திட்டத்தில் சம பதவிகளில் 04 வருடங் களுக்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

அல்லது,

ஆ. கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி (உ/த) சித்தி அல்லது, க.பொ.த (உ/த) பரீட்சையில் 03 பாடங்கள் சித்தியுடன், கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் காசாளர்/ வியாபாரத்துறையில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை :- 21 - 45

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

03. பதவி :- அங்கத்தவர் தொடர்பு உத்தியோகத்தர்.

சம்பளக்குறியீட்டு இல. :- 201/10

சம்பள அளவுத்திட்டம் :- (4750-100X10 - 110X10-6850) + (1250/=)

தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது ,

கூட்டுறவுப்பணியாளர் 12ஆவது சம்பளத்திட்டத்தில் அதே பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது,

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாகவும், ஒரு அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனத்தில் கூட்டுறவுச் சமூக அபிவிருத்தி சம்பந்தமான துறையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*குறிப்பு :-* குறிப்பிட்ட 03 பதவிகளுக்கும கணினி அறிவும், திறனும் உள்ள வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி:-10.09.2004 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பத்தினை தலைவர், கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பரந்தன். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர்,
கரைச்சி வடக்கு ப.நோ.கூ. சங்கம்,
பரந்தன்.

(சி-9793)


# சேவை விரிவாக்கம்

சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் இந்தியாவுக்கு மேலும் 11 விமான சேவைகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.எதிர் வரும் ஒக்ரோபர் மாத முற்பகுதியில் இருந்து இந்த சேவைகள் ஆரம் பிக்கப்படும் என்றும், இத்துடன் சிறிலங்கன் ஏயார்லைன்ஸ் இந்தியா வுக்கு மொத்தம் 77 விமான சேவைகளை நடத்தும் என்றும் தெரிவிக் கப்படுகின்றது.


# தவறவிடப்பட்டது

போக்குவரத்துக்கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பகுதிக்கு உரிய 01-100, 147-150, 640-650, 840-850, 952-1000,1201-1350, 1951-2000, 2801-2850 ஆகிய தொடர் இலக்க பற்றுச்சீட்டுக்கள் தவறவிடப்பட் டுள்ளன.


இவற்றைக் கண்டெடுத்தவர்கள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
போ.க.பிரிவு.

(4989)


# 3ஆம் ஆண்டு நினைவில்

தோற்றம் 18 - 12 - 1951



மறைவு 27 - 08 - 2001

## சின்னத்துரை – திருச்செல்வம்

(சந்திரன்)

ஏழாலை மத்தி, ஏழாலை.


மாண்பற்ற இவ்வுலகில்
மனிதனாய் வாழ விளைந்தவரே
மரணம் உம்மை மறைத்துவிடவில்லை -ஏனெனில்
மறுபிறவியாய் நீர் எம்மில்
நிலைத்திருப்பீர்.

*பிரிவால் துயருறும்*
மனைவி- வவா,
வேந்தன்,அரசி, ஆயவன்
ஜாதவன், கேசவன்.
பகீரதன் (மருமகன்)

முகவரி:-
வள்ளுவர்புரம்,
விசுவமடு. (4987)

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்

வல்வையில் முத்தாக 01 - 04 - 1975



ஈழத்தில் வித்தாக 26 - 08 - 2000

## மேஜர் எமர்சன் /திருவருள்

(சீனிமாமா)


அப்புத்துரை – சிவானந்தமூர்த்தி

ஆழ்கடல் தோணியைப் போல்
ஆடுகிறோம் உன் நினைவில்
ஆடிவரும் அலைகளிடையே எம்
விழி நீரும் பெருகுது - எமர்சா
மனதினில் எமக்கு நீ என்றுமே
மறையாத குலவிளக்கு
ஓயாமல் தாய் மண்ணுக்காய் உழைத்தாய் - நீ
ஓய்வாக விழி மூடித்தூங்கு
நிச்சயம் மலரும் தமிழீழம்.


இந் நாளில் மேஜர் எமர்சனின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

நி.மு:-
பெரியதம்பிரான் கோவிலடி,
பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறை.
த.மு:-
உலகளந்த பிள்ளையார்
கோவிலடி,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (4685)


தகவல்:-
அப்புத்துரை
குடும்பத்தினர்.
(இராமநாதன்
மேஸ்திரியார்)


2ஆம் ஆண்டு நினைவலைகள்
கேணல் ராயு (குயிலன்)
ஏழாலை தெற்கு, யாழ்.
அம்பலவாணர் நேமிநாதன்
மலராக 30-05-1961
விதையாக 25-08-2002
கார்முகில் போலறிவு ஈர்ந்து நின்றான்- நாம
கண்ணீரில் மிதக்கவோ ஓய்ந்து விட்டான்
போர்முனைப் பீரங்கி முழக்கமிவன்-தமிழ்ப்
புலிகளின் வெற்றியின் விராக்கமிவன்.
கேணல் கிட்டுப் பீரங்கிப் படையணி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
(சி-10088)


## எதென்ஸ்-2004
நேற்றைய போட்டிகளில் சில...




முப்பாய்ச்சல் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் இத்தாலியின் மக்டலின் மார்ட்டினஸ்.




முப்பாய்ச்சல் போட்டியில் இறுதிப்போட்டியில் பங்கேற்ற கிரீஸ் வீராங்கனை ஹைகோபி டெவஞ்சி.




100மீற்றர் தடைத்தாண்டல் ஓட்டப் போட்டியில் காயமுற்ற ஜேர்மனியின் கர்ஸ்ரன் போம்.



ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் அங்கோலாவிற் கெதிரான போட்டியை வேடிக்கை பார்க்கும் அமெரிக்காவின் அலென் கிவேர்ஸன்



பெண்களுக்கான சமநிலை ஜிம்னாஸ்டிக்கில் வெண்கலம் வென்ற ரொமேனியாவின் அலெக்ஸான்ரா ஜோர்யியானா எராமியா,

## எதியோப்பிய வீராங்கனைக்கு தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆபிரிக்க வீராங்கனைகள் முதல் மூன்று இடங்களையும் பெற்றனர்.

15 பேர் கலந்து கொண்ட இப்போட்டியில் ஆரம்பத்தில் சீன வீராங்கனைகள் முன்னிலை வகித்த போதும் 3800 மீற்றர் தூரத்தைக் கடக்கும்போது ஆபிரிக்க வீராங்கனைகள் முன்னிலை பெற்றனர்.

இறுதிச் சுற்றில் அதிகளவு ஆற்றலை வெளிப்படுத்திய எதியோப்பிய வீராங்கனை நெஸ்ரஸ்டிபா 14 நிமிடம் 45.63 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து தங்கப் பதக்கம் வென்றார்.வெள்ளிப் பதக்கதை கென்ய வீராங்கனையும், வெண்கலப் பதக்கத்தை எதியோப்பிய வீராங்கனையும் சுவீகரித்தனர்.

## கெமரூனுக்கு முதல் தங்கம்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் முதலாவது தங்கப் பதக்கத்தை கெமரூன் நேற்று முன்தினம் கைப்பற்றியது.

பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியிலேயே கெமரூன் தங்கப் பதக்கத்தை வென்றெடுத்துள்ளது.

கிரண்பால் அம்பாண்டோ தங்கப் பதக்கம் வென்றார். 15.30 மீற்றர் தூரத்தை பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றார். 15.25 மீற்றர் தூரத்தை பாய்ந்து கிரேக்க வீராங்கனை வெள்ளிப்பதக்கத்தையும், 15.02 மீற்றர் தூரத்தை பாய்ந்து ரஷ்ய வீராங்கனை வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

### ஒலிம்பிக் ஆடவர் ஹொக்கி

## லீக் போட்டிகள் நிறைவடைந்தன
## அரையிறுதிப் போட்டிக்கு நெதர்லாந்து

ஒலிம்பிக் ஹொக்கி போட்டியில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற இந்தியாவுக்கும் ஆர்ஜென்டீனாவுக்கும் இடையிலான போட்டி சம நிலையில் நிறைவடைந்தது. மற்றுமொரு போட்டியில் அவுஸ்திரேலியாவை தோற்கடித்த நெதர்லாந்து அரையிறுதிப்போட்டிக்கு தெரிவானது.

இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் போட்டன.

ஆட்டநேரம் முடிவதற்கு சில நிமிடங்களே இருந்தபோது இந்தியா 2-1 என்று முன்னிலையில் இருந்த போதும் கடைசி நிமிடங்களில் பனால்டி கோணர் மூலம் ஆஜென்டீனா அடித்த கோல் மூலம் போட்டி சமநிலை பெற்றது.

அன்று நடைபெற்ற ஏனைய போட்களில் நெதர்லாந்து- அவுஸ்திரேலிவையும், பாகிஸ்தான்- பிரிட்டனையும், நியூசிலாந்து- தென்னாபிரிக்காவையும், ஸ்பெயின் -எகிப்தையும் வெற்றிபெற்றன.

## அதிர்ச்சித் தோல்வி

எதென்ஸ் ஒலிம்பிக் பெண்கள் ஹொக்கிப் போட்டியில் கடந்த 2 முறை தொடர்ந்து தங்கப் பதக்கம் வென்ற அவுஸ்திரேலிய அணி தனது கடசி லீக் ஆட்டத்தில் நெதர்லாந்துடன் மோதியது. இதில் அவுஸ்திரேலிய அணி 0-1 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் . தோல்வி அடைந்தது. இந்தத் தோல்வியின் மூலம் தொடர்ந்து 3ஆவது முறையாக தங்கம் வெல்ல அவுஸ்திரேலியா எடுத்த முயற்சி முடங்கிப் போனது.ஏ பிரிவில் இருந்து சீனா - ஆர்ஜென்டீனாவும், 'பி' பிரிவில் இருந்து நெதர்லாந்து-ஜேர்மனி அணி களும்முறையே முதல் இரண்டு இடங்களைப் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறின. அரை இறுதியில் சீனா-ஜேர்மனியும், நெதர்லாந்து-ஆர்ஜென்டீனாவும் மோதுகின்றன.




200மீற்றர் தகுதிகாண் போட்டியில் பங்கேற்கும் அவுஸ்திரேலியாவின் கரின் மயுர் கிரிப்கா, யமேக்காவின் வெறோனிகா கேம்பல், பிரான்ஸின் சில்வியன் பீலிக்ஸ்.



20 கிலோமீற்றர் வேக நடையில் வெண்கலம் வென்ற அவுஸ்திரேலிய வீராங்கனை ஜேன் சேவ்லி கண்ணீருடன்.



உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற அமெரிக்க வீரர் மெட் ஹெமிங்வே.

## கிரிக்கெட்டில் ஊக்க மருந்தை தடுக்க
## புதிய விதிமுறைகள் அறிமுகம்— ஸ்பீட்



கிரிக்கெட்டில் ஊக்க மருந்து பயன்படுத்துவதை முழுமையாகத் தடுக்கும் வகையில் சில புதிய விதிமுறைகளை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

ஐ.சி.சி.தலைவர் மல்கம் ஸ்பீட் இது குறித்து தெரிவிக்கையில்,

ஐ.சி.சி.சம்பியன் கிண்ணப் போட்டியில் இருந்து இந்த விதிமுறை அமுற்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

எந்தவொரு வீரரும் ஊக்க மருந்து பயன் படுத்தியதாக நிரூபிக்கப்பட்டால் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகள் சர்வதேசப் போட்டிகளில் விளை யாடத் தடையும் அபராத மும் விதிக்கப்படும் என்று அவர் கூறினார். இதற்காக மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தனி நடுவர் மன் றம் அமைக் கப்பட்டிருப்பதாகவும் ஸ்பீட் தெரிவித்தார். ஐசிசி போட்டியில் ஒவ் வொரு அணியில் இருந்தும் ரா வது இரண்டு வீர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர் களுக்கு ஊக்க மருந்துப் பரிசோதனை மேற்கொள் ளப்படும் எனவும் மல்கம்




## பாகிஸ்தான் -அவுஸ் அணி மோதல் இன்று
## இறுதிப்போட்டி வாய்ப்பை இழக்குமா இந்தியா?

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் மும்முனை கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி மழையால் கைவிடப்பட இந்திய அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் வாய்ப்பினை பெரும்பாலும் இழந் துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அணி -2 புள்ளிகளைப் பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி 03 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி இன்றைய போட்டியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக மிகப்பெரிய வெற்றி பெற்றால் மாத்திரமே அவுஸ் அணியின் இறுதிப் போட்டி வாய்ப்பை தடுத்து நிறுத்த முடியும். அது சாத்தியப்படுமா என்பது கேள்வியே.

நேற்று முன்தினப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை வெற்றி பெறும் வாய்ப்பு இந்தியாவுக்கு இருந்த போதும் மழை அதனைத் தடுத்து நிறுத்தியிருந்தது.

## மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்று

தென்னாபிரிக்க சிறிலங்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி இன்று தம்புள்ளவில் நடைபெறவுள்ளது.


பகல் இரவாக நடைபெறும் இப்போட்டி தென்னாபிரிக்க அணிக்கு முக்கியமானதாக அமைந்துள்ளது.

இப்போட்டியில் சிறிலங்கா அணி வெற்றிபெற்றால் தொடரைக் கைப்பற்றிவிடும்.

எனவே, இப்போட்டி இறுதி வரை பரபரப்பாக இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.



ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தில் வென்றபின் அவுஸ்திரேலிய அணியினர் தமக்கிடையே வாழ்த்து தெரிவிக்கின்றனர்.



மகளிருக்கான உதைப்பந்தாட்டத்தில் ஜேர்மனியைத் தோற்கடித்த பின் தனது அணியினரை அணைத்துக் கொள்ளும் அமெரிக்காவின் ஹீதர் ஓறெயிலி.

## அகில இலங்கை கால்பந்து போட்டி
## லூசியா, பாணந்துறை அணிகள் மோதல்


அகில இலங்கை உதைப் பந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு II ஆல் நடத்தப்பட்ட உதைப் பந்தாட்டப் போட்டி அண்மையில் மன்னாரில் இடம் பெற்றது. இப்போட்டியில் மன்னார் புனித லூசியா விளையாட்டுக்கழகமும் பாணாந்துறை விளையாட்டுக் கழகமும் மோதின. இரண்டு கழகங்களும் தலா ஒரு கோல்களைப் போட்டு வெற்றி தோல்வியின்றிப் போட்டியை நிறைவு செய்தன.

எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மேற்படி இரு கழகங்களும் மன்னார் விளையாட்டரங்கில் மோதவுள்ளன.

வட்டக்கச்சி லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்து போட்டி நாளை காலை 8.30 மணி தொடக்கம் மாலை வரை கழக மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறும் எனவும், போட்டிகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.




குண்டெறிதல் போட்டிக்கான தங்கப் பதக்கம் பறிக்கப்பட்ட ரஷ்ய வீராங்கனை.




ஆண்களுக்கான தட்டெறிதலில் போட்டியிடும் நெதர்லாந்தின் சீல் வார்னேஸ்

சிந்தனைக்கு



இந்த யுத்தத்தில் எமது போராளிகளும், பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள் உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீரகாவியமாகப் பொறிக்கப்பட்டு விட்டது.

தமிழீழதேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 25-08-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com

# வாக்குவாதம் முற்றி துப்பாக்கிச்சூடு
# கொட்டாவையில் இருவர் பலி

(கொழும்பு)

கொட்டாவைச் சந்தியில் உள்ள பிலியந்தலை வீதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தச் சம்பவம் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினால் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான இவ்விருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளனா. இதே வேளை தங்கொடை நீதிமன்றத்திற்கு வந்தவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது ஒருவர் உயிரிழந்ததுடன் ஐந்துபேர் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதல் வாகனம் ஒன்றில் வந்தவர்களாலேயே மேற் கொள்ளப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## ‘இனந்தெரியாதோர்’

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் அண்மையில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதுஓரிரு தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் சில இராணுவச் சிப்பாய்களும் காயமடைந்துள்ளனர். இத்தாக்குதல்களை நடத்தியவர்கள் யார் என்பது குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை.

ஆனால் சிறிலங்கா இராணுவத்தரப்பினர் இத்தாக்குதல்களுக்கு விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டமுனைந்துள்ளனர். இத்தாக்குதல் குறித்து பிரஸ்தாபித்துள்ள கிழக்கு மாகாண இராணுவத்தளபதி மேஜர். ஜெனரல் வஜிரவிஜய குணவர்த்தன ஷஷவிடுதலைப்புலிகள் இராணுவத்தைத்தாக்க முயற்சிக்கின்றனர். அவ்வாறான தாக்குதல்கள் தொடருமானால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப். பகுதிக்குள் இருந்துவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்க முடியாத நிலை ஏற்படும்;; என எச்சரித்துள்ளார்.

முதலில் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி குறிப்பிட்டது போன்று விடுதலைப்புலிகளை இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்காது விடுதல் என்பது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு மாறானதொரு செயல் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. அதாவது யுத்த நிறுத்த உடன்பாட்டின் படி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப்புலிகள் அரசியற் பணியில் ஈடுபடுவதற்கானஅங்கீகாரம் உண்டு.

இது ஒரு புறம் இருக்க, இராணுவக்கட்டுபாட்டுப் பகுதியில் இராணுவத்தினர் மீது மேற் கொள்ளப்படும் தாக்குதல்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் என்ன தொடர்பு? எதனை அடிப்படையாகக் கொண்டு இத்தகையதொரு குற்றச்சாட்டைச் சுமத்த முடியும். இதுவரையில் அதிலும் குறிப்பாக கடந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள்ளும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள்ளும் விடுதலைப்புலிகள் மீது பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. பலர் கொல்லப்பட்டும் உள்ளனர். இது குறித்துப் புலிகள் பலஆட்சேபங்களையும் தெரிவித்திருந்தனர். அத்தோடு பொறுமையும் காத்தனர்.

இத்தாக்குதல்களை இனந்தெரியாதோர் நடத்தியதாகவே இராணுவத்தரப்பு சாதித்து வந்துள்ளது. சிறிலங்கா இராணுவத்தரப்பு அன்றி அதனுடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுக்களே இத்தாக்குதலை நடத்தியுள்ளதாகவும், இத்தாக்குதல்களை வேறு எவரும் நடத்துவதற்கு வாய்ப்பில்லை எனவும் விடுதலைப்புலிகள் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ள போதும் அரசாங்கமோ ஆயுதப்படைத்தரப்போ இதனைக் கண்டு கொண்டதாகவோ, நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவோ இல்லை.

அத்தோடு இத்தாக்குதல்கள் குறித்து தீவிரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாகவோ, இது தொடர்பாக யாராவது கைது செய்யப்பட்டதாகவோ தகவல்கள் இல்லை. அரச அங்கீகாரம் பெற்ற தாக்குதல்கள் என்ற ரீதியில் அவை எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டன.

இத்தகையதொரு நிலையில் தற்பொழுது இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு எவ்வாறு புலிகள் மீது குற்றம்சாட்டமுடியும்? தாக்குதல் நடத்தியதாகப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் யாராவது கைது செய்யப்பட்டார்களா? அன்றிப் புலிகள் தான் தாக்குதல்கள் நடத்தினார்கள் என்பதற்கு ஆதாரம்தான் கிட்டியதா?

யுத்த நிறுத்தத்திற்கும் சமாதான முயற்சிகளுக்கும் எதிராகப் பல பலமான சக்திகள் செயற்பட்டு வருகின்றமை வெளிப்படையானது. இந்தகையதொரு சக்தியாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. உண்டு. இச்சக்திகள் சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படுவது போன்று யுத்த நிறுத்தத்திற்கு எதிரான செயற்பாடாக இத்தாக்குதல்களை மேற்கொள்ளமாட்டாது என எவ்வாறு கூற முடியும்? இத்தகைய நடவடிக்கைகள் உலக வரலாற்றுக்கும் இத்தகைய சதி முயற்சிகள் புதியவையல்ல.

இந் நிலையில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தாக்குதல் நடத்தும் இனந்தெரியாதோர் யார்? என்பதை ஆதயுப்படைத்தரப்பு கண்டறிதல் வேண்டும். புலிகள் மீது தாக்குதல் நடத்தும் போது தாக்குபவர்கள் இனந்தெரியாதவர்கள் ஆகிவிட, இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் மட்டும் அவ் இனம்தெரியாதோர் எவ்வாறு புலிகள் ஆகிவிட முடியும்?

ஆகையினால், யுத்த நிறுத்தம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் முதலில் விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தும் இனந்தெரியாதோர் கண்டறியப்படவும். கைது செய்யப்படவும் வேண்டும். இது சாத்தியமானால் இத்தகைய தாக்குதல்கள் நின்று போய்விடக்கூடும். ஏனெனில் இனந் தெரியாதோர் கண்டறியப்பட்டுவிடுவர்.

# அரசின் தவறான வழி நடத்தல்களால் மக்கள் இன்று வருந்துகின்றனர்

-முன்னாள் அமைச்சர் எஸ்.பீ.திசாநாயக்கா

(கொழும்பு)

- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தவறான வழிநடத்தலினால் மக்கள் வருந்துகிறார்கள் என முன்னாள் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரான எஸ்.பி.திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்“வாழ்க்கைச்செலவை குறைப்பதாகப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கிய அரசு இன்று அதற்கு நேர்மாறாக மக்களை ஏமாற்றி வஞ்சனை செய்துள்ளது.

எரிபொருளின் விலைகள் ஒரு தடவை அல்ல இரண்டு தடவைகள் அதிகரித்துள்ளன.

ஜே.வி.பி. மக்களின் துன்பத்தைப்பற்றி அக்கறை கொள்ளாமல் இருக்கின்றது. நிதியமைச்சரோ குறைவுகள் அபிவிருத்தியைப் பாதிக்கும் என்கிறார்.

இப்பொழுது ஆளும்கட்சியினர் தங்களுடைய மகிழ்ச்சிக்கான சலுகைகளைப்பற்றியே கவலைப் படுகிறார்கள்.

ஐக்கியதேசியக்கட்சி ஒரு கிளாஸ் பால்வழங்கவதற்காக நிதி ஒதுக்கியது. அத்துடன் பாற்பண்ணையாளர்களின் அபிவிருத்தியையும் பால் உற்பத்தியைப் பெருக்குவதையும் நோக்காகக் கொண்டு இத்திட்டத்தைச் செயற்படுத்த எண்ணியிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியினால் பொருளாதாரத்தின் திறமைமிக்க முகாமைத்தவத்தின் மூலம் மக்கள் இலாபங்களைப் பெற்றார்கள். இப்போது அது இல்லாமற் போய்விட்டது.

ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் இப்போது மக்கள் மீது தாங்க முடியாத சுமைகளை ஏற்றுகின்றது. ஐக்கிய தேசியக்கட்சி இந்நிலையைத் தொடர அனுமதிக்காது மக்களின் சுமைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க அக்கட்சி ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் திசாநாயக்கா எச்சரித்துள்ளார்.

# சந்திரிகாவுக்கு நெருங்கிய அதிகாரிகளால் அமைச்சர்களின் நடவடிக்கைகள் பாதிப்பு

அரச நிறுவனங்களுக்கும், அரச கூட்டுத்தாபனங்களுக்கும் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட சிரேஷ்ட அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவது கடினமாக உள்ளதாகப் பல அமைச்சர்கள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அறிவிக்கத் திட்டமிட்டுள்ளனர். அண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு மிக நெருங்கியவர்களை அரச நிறுவனங்களுக்கு அதிகாரிகளாக நியமித்திருந்தார்.

இவர்கள் சனாதிபதியின் கட்டளைகளையே நிறைவேற்றுகின்றனர் என்றும், அமைச்சர்களின் கட்டளைகளை நிறைவேற்றவில்லை என்றும் இதனால் தமது நடவடிக்கைகள் பாதிக்கப் படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

## மாந்தை மேற்கில் கிராமமக்களின்
# வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது குறித்து அனைத்துத் தரப்பினரும் இணைந்து ஆராய்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப்பகுதிக்கு உட்பட்டதும் 25 வருடங்களுக்கு மேலாக சொந்தக் காணியோ எவ்வித அடிப்படை வசதிகள் எதுவுமற்ற பள்ளமடு, புலக்காடு, விடத்தல்தீவு கிழக்கு மேற்கு ஆகிய கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக மன்னார் மாவட்ட அரசியல் துறையின் ஏற்பாட்டில் மன்னார் அரசியல் துறைக்குட்பட்ட பிரிவுகளின் அனுசரனையுடன் புலக்காடு கிராமத்தில் மாபெரும் கிராமிய எழுச்சிப் பாசறை நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் அடம்பன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் றொபேட் அவர்களின் தலைண்மயில் ஆரம்பமாகின. நிகழ்வில் பொதுச்சுடரினை பள்ளமடு கிராம அலுவலர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட தமிழீழ நிர்வாகசேவை, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வனவளப்பாதுகாப்புப் பிரிவு, மாவீரர் போராளிகள் குடும்ப நலன்காப்பகம், திலீபன் மருத்துவ சேவை ஆகியவற்றைச்சேர்ந்த பணியாளர்கள், பொறுப்பாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு அம்மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகளை உள்வாங்கி அதனைத் தீர்ப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையினை விரைவில் செயற்படுத்துவதற்கு தீர்மானித்தனர்.

தொடர்ந்து அந்நிகழ்வில் கிராமத்தின் தேசிய எழுச்சிப் பேரவை, கமக்காரர் அமைப்பு, சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு, விளையாட்டுக்குழு, கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு எமது தேசியத்தின் மேன்மையைக் கட்டிக் காக்க அனைத்து அமைப்புக்களும் பலமான சக்தியாக செயற்பட வேண்டுமென உணர்த்தப்பட்டது. கிராமத்தின் வளர்ச்சிக்காக தொடர்ந்து செயற்படும் அதிகாரிகள், நிறுவனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பு அடுத்தவாரம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (மி)

# புலமைப் பரிசில் விடைத்தாள்கள் திருத்தும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கண்டி, இரத்தினபுரி, வவுனியா, யாழ்ப்பாணம், மாத்தறை ஆகிய ஆறு நிலையங்களில் இப்பணி நடைபெறும் என பரீட்சைத் திணைக்கள பணிப்பாளர் எம்.விஜேசிறி தெரிவித்துள்ளார். இம் மாதம் 29 ஆம் திகதி இப்பணி நிறைவடையும் எனவும் தொடர்ந்து பெறுபேறுகள் வெளியிடப்படும் எனவும் பாடசாலைகளுக்கான அனுமதிகள் அடுத்த ஆண்டு சனவரியில் தொடங்கும் எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மூன்று இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் இந்த வருடம் மேற்படி பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### வடமராட்சி வடக்கில்

## நிவாரணம் மீளாய்வு நடவடிக்கை

## இடம் பெயர்ந்த மக்கள் புறக்கணிப்பு

இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் உலருணவு நிவாரண விநியோகத்தை மட்டுப்படுத்தும் வகையில் அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீளாய்வு நடவடிக்கையினை வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் பகிஸ்கரித்துள்ளனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக வலிகாமம் வடக்கின் கரையோரக் கிராமங்களானபலாலி, மயிலிட்டி மற்றும் வளலாய் வடக்கு பகுதியிலிருந்தும் நாகர் கோவிலிருந்தும் இடம் பெயர்ந்த மீனவ குடும்பங்களே இம் மீளாய்வு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

நேற்று வடமராட்சி வடக்கின் சக்கோட்டைப் பகுதியில் மீளாய்வு நடவடிக்கைக்காக கூட்டப்பட்ட அரச அதிகாரிகளின் கூட்டத்தினை பகிஸ்கரித்ததுடன் அம்மக்கள் அங்கிருந்து வெளிநடப்பும் செய்திருந்தனர்.

தம்மைச் சொந்த இடங்களில் குடியமரவோ சொந்த இடங்களில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடவோ அனுமதிக்காத நிலையில் அரசினால் வழங்கப்பட்டு வரும் உலருணவு நிவாரண விநியோகத்தை மட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளை இடம்பெயர்ந்த மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

இதனிடையே இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த 127 இற்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த 468 பேர் வடமராட்சி வடக்கின் கரையோரக் கிராமங்களில் அகதிமுகாம்களில் வாழ்ந்து வருவதாக யாழ்.செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் யாழ்.குடாநாட்டில் தொழிலிழப்பு மற்றும் இடம்பெயர்வு காரணங்களால் சுமார் ஒரு இலட்சத்து பத்தொன்பதாயிரம் குடும்பங்கள் அரசின் உலருணவு நிவாராணத்தை நீண்ட காலமாக பெற்று வருகின்றன. அவ்வாறு உலருணவு நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையினை 1/3 பங்கால் குறைக்க அரசு இவ்வருட ஆரம்பத்தில் முற்பட்டிருந்தது. எனினும் பல தரப்புக்களதும் எதிர்ப்பினை அடுத்து நிவாரண விநியோகத்தை தற்காலிகமாக வழமை போன்று அனைவருக்கும் விநியோகிக்க அரசு சம்மதித்திருந்தது. ஆயினும் உரிய மீளாய்வைச் செய்து பட்டியலை சமர்ப்பிக்குமாறு யாழ்.செயலகத்திற்கு விடுக்கப்பட்ட பணிப்பினை அடுத்து செயலக அதிகாரிகள் இம் மீளாய்வு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## தீவகப்பகுதியில் படையினரால் கொல்லப்பட்ட பொது மக்கள் நினைவாக தூபிதிறப்பு

கடந்த 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி மண்டைதீவைப் பிடிக்கவென கொப்பேகடுவ தலைமையிலான இராணுவத்தினரும் தேசவிரோதிகளும் ஊருண்டிப்பகுதியில் தரையிறங்கி முன்னேறிய போது அநியாயமாகக் கொல்லப்பட்ட பொது மக்களின் நினைவு நிகழ்வும் 24.08.1990 அன்று சரவணைப்பகுதியில் கொல்லப்பட்ட சிவகுமார்,நாகம்மா, குமாரசாமி, சுப்பிரமணியம், இராசகோபால், விமலநாதன், அருளமுதன் ஆகியோரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி திறப்புவிழாவும் நேற்றுப் பிற்பகல் சரவணையில் நடைபெற்றது.

சரவணை நாகேஸ்வரி வித்தியாலய அருகாமையில் அதன் அதிபர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். தேசியக்கொடியை தீவகக்கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். நினைவுரைகளை செம்மணன் மற்றும் ஊர்காவற்துறை உதவி அரசஅதிபர் செல்வநாயகம், விரிவுரையாளர் இளம்பிறை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் ஆகியோர் நிகழ்த்தினர். (36)

## கொழும்பு, கிழக்குப் படுகொலைகளை அரசாங்கம் கண்டிக்கிறதாம்

(கொழும்பு)

கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் அண்மைக்காலத்தில் நடந்துவரும் அனைத்துக் கொலைச் சம்பவங்களையும் அரசாங்கம் கண்டித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இந்தச் சம்பவங்கள் அனைத்தும் போர் நிறுத்த உடன்பாட்டைப் பாதிக்கும் வகையில் அமைந்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடுகையில் அரசியல் காரணங்களை மையப்படுத்தி செய்யப்படும் கொலைகளும் சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்கும் என்பதே அரசாங்கத்தின் கருத்தெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## ஜப்பானிய தூதுவர் மட்டக்களப்பில் படைத்தரப்புடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜப்பானிய தூதுவர் அக்கியோ சூடா மட்டக்களப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் படைத்தரப்பினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நேற்று நடந்த இந்தச் சந்திப்பின் போது மட்டக்களப்பில் நடைபெறும் கொலைகள் மற்றும் ஏனைய சம்பவங்கள் சமாதானத்திற்கு ஏற்படுத்தி உள்ள தாக்கங்கள் குறித்தும் அவர் கலந்துரையாடியுள்ளார்.

இவரின் இந்தப்பயணம் மட்டக்களப்பில் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காகவே அமைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## வெடிமருந்துவைத்து விளையாடிய சிறுவன் வெடிவிபத்தில் படுகாயம்

(செட்டிகுளம்)

துவிச்சக்கர வண்டி பாரினுள் வெடிமருந்து வைத்து விளையாடிக் கொண்டு இருந்தபோது அது வெடித்து சிறுவன் ஒருவன் படுகாயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கல்நாட்டினகுளம் பகுதியில் நேற்று மதியம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது காயமடைந்த 12 வயதான நிரோசன் என்பவரே வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(21)

## வவு.வளாக கற்றல் செயற்பாடுகள் செப்.1ஆம் திகதி ஆரம்பிக்கத் தீர்மானம்

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் நின்று போயுள்ள கற்றற் செயற்பாடுகள் மீண்டும் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பாக யாழ்பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸிற்கும், வவுனியா வளாக முதல்வர் திருமதி ஆர்.மகேஸ்வரன் மற்றும் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்களுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்திருந்த வவுனியா வளாக முதல்வர் மற்றும் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுடன், யாழ்.பல்கலைக் கழக கல்விசாரா ஊழியர் பிரதிநிதிகளும் இப்பேச்சுக்களின் போது கலந்துகொண்டிருந்தனர்.

தமது கோரிக்கைகளை முன்வைத்த வவுனியா வளாக ஊழியர் சங்கம் அண்மையில் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தது எனினும் துணைவேந்தரது உறுதிமொழியினையடுத்து இப்போராட்டம் விலக்கிக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை கற்றற் செயற்பாடுகள் ஏதும் மீள ஆரம்பிக்கப் படாதிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

## நியாப் அமைப்பின் பணிப்பாளர் நேற்று யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்.குடாநாட்டிற்கான ஏழு நாள் விஜயமொன்றை மேற்கொண்ட நியாப் அமைப்பின் பணிப்பாளர் சிகால் பெர்ணான்டோ நேற்று வருகை தந்திருந்தார்.

"நியாப்" நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ்.குடாநாட்டினில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களையும் அவர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டார்.

யாழ். செயலகத்திற்கு பின்னர் விஜயம் செய்த அவர் மேலதிக அரசாங்க அதிபர் க.சிவசாமி தலைமையிலான செயலக அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினார்.

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பல புனரமைப்பு நடவடிக்கைகளிலும் "நியாப்" பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

### அக்கரைப்...

நீதிமன்ற கூட்டிற்கு அழைத்துச் செல்ல முற்பட்ட சமயம் நீதிமன்ற பார்வையாளர் முன்வரிசையில் இருந்து இவர் மீது சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டனஎனப் பொலிசார் கூறியுள்ளனர்.

இதேவேளை துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர்கள் நீதிமன்ற மதில் மீதேறி வெளியே குதித்து அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுவிட்டதாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

மேற்படி சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து ஒன்பது எம்.எம். ரக கைத்துப்பாக்கிக்குரிய பதினாறு வெற்றுத் தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

இதேவேளை இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தின்போது நீதிமன்ற பிஸ்கால், மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர் கே. சிவகுமார் என்பவரும் படுகாயமடைந்தனர்.

### சுண்டல்...

கொடிகாமம் நகர்ப்பகுதியில் தென்பகுதி வியாபாரிகள் என்ற போர்வையில் போதைப்பொருள் விற்பனையும் நடைபெறுவதாகவும் சமூக நலன்விரும்பிகள் தரப்பிலிருந்து கடும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாறான போதைப்பொருட்கள் விற்பனைகளில் எவரேனும் ஈடுபட்டால் உடனே பொதுமக்கள் சமூக நலன் கருதி சம்பந்தப்பட்ட தரப்புக்களிடம் முறையிடும் படி கோரப்பட்டுள்ளது.(28)

### அமைதி...

மளிக்காதவை. அவை அமைதி வழிமுறையைக் கட்டி எழுப்பவும் உதவாது என்றார்.

இதேவேளை திருகோணமலை துறைமுகப்பகுதி பற்றி அவர் குறிப்பிடும்போது, அது குறித்துப் பேசுவதற்கு இது சரியான தருணமல்ல. திருகோணமலைத்துறை முகப்பகுதி தொடர்பாக இலங்கை அரசுடனும் விடுதலைப்புலிகளுடனும் விவாதித்து வருகிறோம். எமது முடிவுகளையும் இரண்டு தரப்பினரிடமும் தெரிவித்துள்ளோம். அது குறித்தும் இன்று விடுதலைப்புலிகளைச் சந்திக்கும் போது விவாதிப்போம் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் களத்தில் ஒன்றாக அமரவைத்து ஒரு பேச்சுவார்த்தை நடத்துவதுதான் எங்களுடைய முக்கிய கடமையாகும்.

அதுதான் மேற்கொண்டு நகர்வதற்கும் வழிவகுக்கும். பாதுகாப்புப் படையினரும், விடுதலைப்புலிகளும் தொடர்ந்து சந்தித்துப் பிரச்சினைகளை விவாதித்தாக வேண்டும்.

ஏனெனில் கிழக்கிலுள்ள நிலைமை அமைதி வழிமுறையை மேலே கொண்டு செல்ல உதவக் கூடிய நிலையில் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் சிறிலங்கா முப்படைத்தளபதிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### வரதர்...

நீதிவான் இளஞ்செழியன் மாவட்ட வைத்திய அத்தியட்சகர் ஆகியோருடன் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் எலும்புக்கூட்டுத் தொகுதியை மீட்டுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவான ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணியைச் சேர்ந்த மூவருமே இக் கொலையைப் புரிந்துள்ளனர்.

பிரதான சந்தேக நபரான மெண்டிஸ் திலக்ராஜா சிதம்பரபுரம் பழைய வீட்டுத்திட்டத்தில் உள்ள குறித்த கைவிடப்பட்ட வீட்டில் தனது காதலருடன் இருந்த அப்பெண்ணை அச்சுறுத்தி வரவழைத்து பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திய பின் அவர் தடுக்க முற்பட்டபோதும் கழுத்தை கயிற்றினால் இறுக்கி கொலை செய்ததாகவும் தனது நண்பர் இருவரை அச்சுறுத்தி அவர்களின் உதவியுடன் பெண்ணின் சடலத்தை கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துச் சென்று மலக்குழியில் போட்டதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். அத்துடன் பெண்ணின் நகைகளை 6500 ரூபாவிற்கு தான் விற்றதாகவும் பொலிசாரிடம் கூறியுள்ளார்.

இந்த எலும்புக்கூட்டுத் தொகுதியினை கண்டி உடற்கூற்று நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுமாறு நீதவான் இளஞ்செழியன் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மெண்டிஸ் திலக் ராஜாவுடன் பாபு மற்றும் சீலன் ஆகிய மேற்படி ஆயுதக் குழு உறுப்பினர்கள் மூவருமே கொலைக் குற்றச்சாட்டில் கைதாகி விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### மட்டு...

சுட்டிக்காட்டியதுடன் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் இராணுவச்சிப்பாய் விடுவிக்கப்பட்டமை மட்டக்களப்பில் ஊர்காவற்படையினரை விடுதலைப்புலிகள் விடுவித்தமை போன்றவற்றையும் சுட்டிக்காட்டி உள்ளனர். இந்தப் போராட்டம் நேற்று மாலை கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (32)

### புலிகள்...

களுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க விரும்பவில்லை. அவ்வாறான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமானால் இந்தியாவிடம் அல்லது அமெரிக்காவிடமே இவர்கள் செல்ல வேண்டும் என்றார்.

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு தகுந்த அம்சம் எனக் குறிப்பிட்ட அவர் இலங்கை அரசாங்கம் இதன் அடிப்படையில் பேச்சு நடத்த முன்வராதமை துரதிஷ்டவசமானது எனவும் குறிப்பிட்டார்.

சமாதான நடவடிக்கைகளில் மாற்றுத்தமிழ் அமைப்புக்கள் இணைத்துக்கொள்ளப்படாமை குறித்துகேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்த நோர்வேயின் விஷேட தூதுவர் இலங்கை சனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் விடுதலைப் புலிகளிகள் தான் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டை ஏற்று கருத்து வெளியிட்ட பின்னர் ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் பேசவேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் கூறினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அதிசக்தி வாய்ந்த ஒலிபரப்புக்குக் கருவிகளை நோர்வே அரசாங்கம் வழங்கியமை குறித்து கருத்தெரிவித்த நோர்வேயின் விஷேடதூதுவர், ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் இருந்தபோது அந்த அரசாங்கத்தின் அனுமதியுடனேயே அந்த உபகரணங்கள் வழங்கப்பட்டதாகவும் கூறினார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.